
# கோயில் சொல்லும் கதை

- தி. மயூரகிரி



# கோயில் சொல்லும் கதை



தி. மயூரகிரி

2025

உ

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | - | "கோயில் சொல்லும் கதை" |
| ஆசிரியர் | - | தியாக. மயூரகிரிக் குருக்கள்<br>(நீர்வேலி) |
| வெளியீட்டு நாள் | - | 2025 .08.21 (யாழ். நல்லூர் கந்தசுவாமி திருக்கோயில் திருத்தேர்ப் பெருவிழாத் திருநாள் - குருபுஷ்யம்) |
| தாளின் வகை | - | 70g பேப்பர்<br>(வெள்ளைத்தாள்) |
| அட்டை | - | 4 கலர் வெள்ளை தடித்த அட்டை |
| பக்கங்கள் | - | VIII - 60 பக்கங்கள் |
| அச்சுப்பதிப்பு | - | ஷாம்பவி பதிப்பகம்,<br>269, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN No. | - | ISBN 978-955-38411-6-2 |

# முன்னுரை

கோயில் சொல்லும் கதைகள் என்ற இந்த நூல் வழியாக, இலங்கையிலுள்ள கோயில்களை ஒட்டி உலாவும் கதைக்கருக்களை மெருகூட்டிச் சிறு கதைகளாக்கிப் பகிர்வதில் மகிழ்கிறேன்.

இவற்றின் மூலம் இலங்கையின் ஓரிடம் என்றன்றிப் பல பாகங்களிலும் உள்ள பலரும் அறிந்தும் அறியாமலும் இருக்கும் கோயில்களை கதைகளின் வழியாக அறிமுகம் செய்ய முயன்றிருக்கிறேன்.

கந்தசுவாமியார் மரக்கலமேறி இலங்கை வந்தமை முதலான புராணக்கதைகளும் புராணங்களில் உள்ளன ஆயினும், அவ்வாறான புராணச் செய்திகளை தவிர்த்து, பொ.பி (கி.பி) 8ஆம் நூற்றாண்டு தொடக்கம் 2025 வரையான காலத்தை உள்வாங்கியே இவற்றை எழுத முயன்றிருக்கிறேன்.

கதைகளின் வழி ஈழத்துச் சைவத்தமிழர்களின் வாழ்வியல், அந்நியர் வருகையால் ஏற்பட்ட நெருக்கடிகள், சமூகவியல், அரசியல், நம்பிக்கைகள் என்பவற்றையும் ஆங்காங்கே தொட விரும்பியிருக்கிறேன்.

ஈழத்துக்கோயில்களை களமாக்கி பௌராணிக மரபை விடுத்து உண்மையில் நடந்ததாக நம்பப்படும் கதைகளைக் கருவாக்கி, கதைகளாக்கி நூலாக்கல் என்பது ஒரு வகையில் புதிய முயற்சி தான்.

இவற்றில் சில அவ்வப்போது தனித்தனியாக எழுதப்பட்டு இதழ்களிலும் இணையத்திலும் எழுதப்பட்டு சமூக வலைத்தளத்தில் பன்னூறு நண்பர்களால் படித்துப் பகிரப்பட்டவை.

அப்போதெல்லாம் இவற்றை தொகுத்து நூலாக்குமாறு பல அன்பர்கள் வலியுறுத்தினர். இப்போது இறையருள் கூட நூலாக்கிச் சமர்ப்பிக்கிறேன்.

இந் நூலாக்கப்பணியில் தேவையான தகவல்களை வழங்கியும், நல்ல ஆலோசனைகளை தந்தும், உதவிய பெரியோர்கள், நட்புள்ளங்கள் என் பெற்றோர் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அது போல விரைவாகவும், சிறப்பாகவும் நூலுருவாக்கிய ஷாம்பவி பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகள்.

அடுத்த தலைமுறைக்கும், புலம்பெயர் உறவுகளுக்கும் எமது கோயில்கள் பற்றிய செய்திகளைப் பகிர வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

எல்லாம் வல்ல இறைவனின் பெருங்கருணை எம்மையும் உங்களையும் வழிப்படுத்தப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்பையும் ஆக்க பூர்வமான விமர்சனங்களையும் நாடி நிற்கிறேன்.

**அன்புடன்,**
**தி. மயூரகிரி**
**(சிவஸ்ரீ தி. மயூரகிரிக் குருக்கள்)**

**புகழ்பூத்த தமிழ் - ஆன்மீக பேச்சாளரும், எழுத்தாளருமான திரு. ஜடாயு (இந்தியா) அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

*கோயில் சொல்லும் கதை என்ற இந்த சிறிய, விறு விறுப்பான நூலை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். இலங்கையின் பல பகுதிகளிலும் உள்ள கோயில்களின் ஆச்சரியமான வரலாறுகளை சுருக்கமாகவும், அழுத்தமாகவும் பதிவு செய்திருக்கிறார் நண்பர் தி. மயூரகிரி சர்மா (தி. மயூரகிரி குருக்கள்) அவர்கள். ஒவ்வொரு கதையும் ஒரு மின்னல் கீற்று போல இருக்கிறது.*

*பெரும்பாலான கதைகளின் காலம் கடந்த 200-300 ஆண்டுகளுக்குள் என்பதால், அவை அளிக்கும் வரலாற்றுச் சித்திரம் முக்கியமானதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. கடும் கிறிஸ்தவ மதவெறியர்களாக இருந்த போர்த்துக்கிசீயர், ஒல்லாந்தர் காலனிய ஆட்சிக் காலங்களில் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு, இந்துக்களுக்கு வழிபாட்டுரிமைகள் மறுக்கப்பட்டது, அந்த சூழலில் ஈழத்துச் சைவர்கள் பல்வேறு விதங்களில் தங்கள் கோயில்களைக் காப்பாற்ற முயன்றது, சிதைவுகளுக்குப் பின்னும் அவற்றைக் கட்டியெழுப்பியது குறித்த விவரணங்கள் மீண்டும் மீண்டும் இக்கதைகளில் வந்து கொண்டிருக்கின்றன.*

*1980-90களில் தொடங்கிய உள்நாட்டுப் போர், இடப்பெயர்வுகளின் பின்னணியில் வெளிப்படும் இலங்கைத் தமிழ் இந்துக்களின் உறுதியான தெய்வநம்பிக்கையும், கோயில்கள் புகலிடங்களான செய்திகளும் ஓராயிரம் நினைவுகளையும், இன்னல்களையும், துயரங்களையும் உள்ளடக்கியவை என்பது அந்த சம்பவங்களுடன் பரிச்சயமுடையவர்களுக்கு சொல்லாமலே விளங்கும். கனடா, ஜெர்மனி, பிரிட்டன் என உலகின் பலநாடுகளிலும் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இன்னும் தத்தம் ஊர்க்*

கோயில்களையும், அவற்றின் திருவிழா நாட்களையும் மறக்காமல் வருடந்தோறும் நினைவூட்டிக் கொண்டிருப்பது பற்றிய உரையாடல் அருமை.

கீழ்சாதி என்று கருதப்படும் சமூகத்தினருக்கு அருள் புரிந்த பன்றித்தலைச்சி அம்மன், இந்தியாவிலிருந்து தோட்டத்துக் காணிகளில் வேலைசெய்ய வந்த பெண்களின் மீது பாலியல் கொடுமைகளைச் செய்த கண்காணிகளின் கொடூரத்திற்கு நடுவிலும் அபயம் அளித்த ஆயிரம் கண்ணுடைய ஆத்தாள் ஆகிய அம்மன் கதைகள் மெய்சிலிர்ப்பூட்டுகின்றன. இவை குறிப்பிடத்தக்க சமூக வரலாற்றுப் பதிவுகளும் கூட.

பொதுவாக, தமிழில் கோயில்கள் பற்றி எழுதப்படும் நூல்கள் அதீதமாக ஸ்தலபுராணங்களை உள்ளடக்கியதாக இருக்கும், முக்கியமான வரலாற்றுச் செய்திகள் கூட இருக்காது. அத்தகைய சூழலில், முழுமையான வரலாற்று பிரக்ஞையுடன், கதைகள் நிகழு, வருடங்களையும் அந்தக் காலகட்டத்தின் வரலாற்று சூழலையும் குறிப்பிட்டு விட்டு,கூடவே ஐதீக புராண வரலாற்றையும் பதிவு செய்யும் இந்த நூலாசிரியரின் பாணி சிறப்பானது. முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டியது.

நண்பரின் பல கட்டுரைகளையும் நூல்களையும் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இலங்கையின் இந்துப் பண்பாட்டு மரபுகளையும், கலாசாரத்தையும் விரிவாகவும், ஆழமாகவும், ஆதாரபூர்வமாகவும் பதிவுசெய்யும் அவரது நற்பணி மேன்மேலும் தொடர்ந்து, வளர வாழ்த்துகிறேன்.

**அன்புடன்,**
**ஜடாயு,**
**பெங்களூர்,**
**இந்தியா.**
**ஆகஸ்டு 16, 2025.**

# கோயில் சொல்லும் கதைகள் உள்ளே....


01. ஏலம் விடப்பட்ட காணி
02. சப்பரம் ஏறினான்
03. அதிசய யந்திரம்
04. வலிந்து கப்பலேற்றப்பட்ட மக்கள்
05. தண்ணீர் தேடிய மந்திரி
06. மீன் செய்த மாயம்
07. நெல் மூட்டைக்குள் கிடைத்த பொருள்
08. உரு எடுத்த முருகு
09. ஓயாத ஓட்டம்
10. காதல் தந்த கோயில்
11. தீவு நகரம் ஆகிறது
12. நினைத்ததை முடிப்பான்
13. எளியார்க்கும் எளியன்
14. கண் கொடுத்த கடவுள்
15. அடியார்க்கு அரண்
16. மாடு பன்றியானது
17. அழகால் வந்த விளைவு
18. இடர்களுக்கு மத்தியிலும் இறைபணி
19. தேரோட்டத்தில் நிகழ்ந்த சம்பவம்
20. போரும் தேரும் சீரும்
21. கடல் நகரில் ஒரு அழகி
22. பேழைக்குள் வந்த பொக்கிஷம்
23. கோணநாதரின் கோயில்களின் கதை
24. ஆங்கிலேயரும் இந்துக் கோயில் அமைத்தார்கள்...!
25. கண்டம் கடந்து பயணிக்கும் ஈழத்துக் கோயில்கள்

# 01. ஏலம் விடப்பட்ட காணி

*கி.பி 1893க்கு சமானமான விஜய வருடம் கார்த்திகை 29, அன்றைக்கு யாழ்ப்பாணக் கச்சேரியின் முன் பல நூற்றுகணக்கானவர்கள் கூடி நிற்கிறார்கள்.*

*அக்கூட்டத்தில் பெரிய தனவந்தர்கள் முதல் நாட்கூலிகள் வரை பல நிலை சார்ந்தவர்களும் இருக்கிறார்கள்.*

*அப்போது சேர். ஆதார் ஹவலக் அவர்கள் தேசாதிபதியாக இருக்கிறார். அவரது அரசின் யாழ்ப்பாண அரச அதிபராக மெஸ். துவைனந்துரை கடமை செய்கிறார்.*

*இவர்களது ஆணையின் படி அப்போது யாழ்ப்பாண அரச அதிபரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மன்னார் மாதோட்டத்து அரச காணி இன்று ஏலம் விடப்பட இருக்கிறது.*

*அதற்காகத் தான் இவ்வளவு பேரும் கச்சேரிக்கு முன் கூடி நிற்கிறார்கள்.*

*அவர்கள் தமக்குள் பல கதைகளும் பேசிக் கொள்கிறார்கள்.*

*அந்தணர் குழு ஒன்று ஒரு மரத்தின் கீழே மெல்லிய குரலில் ஸ்ரீ ருத்ரம் சொல்கிறார்கள். இன்னொரு மூலையில் அடியார் பெருமக்கள் மிக மெல்லிய குரலில் தேவாரப் பதிகங்கள் ஓதுகிறார்கள்.*

*“...திருஞானசம்பந்தர்- சுந்தரர் காலத்தில் கேதீச்சர மணியோசை இராமேசுரத்தில கேட்குமாம்..”*

*“சோழர் காலத்தில் திருக்கேதீச்சர கோபுர வெளிச்சம் மதுரையில் கூட தெரியுமாம்..”*

*“... இப்பவும் கிளறிப்பாத்தால் கோயில் அத்திவாரம் முழுக்க நிலத்துக்குள் இருக்கும்..”*

*“இந்த காட்டுக்கு ஏன் இந்த கிறிஸ்தவரும் போட்டி போடுகினம்..?”*

*“மதுரையில் இருந்தும் காலியில் இருந்தும் காசு வேணுமானாலும் தாறம் எண்டு தந்தி வந்திருக்கு..”*

*இப்படி அவர்களில் பலரும் பேசுகிறார்கள்..*

*அப்படி என்ன நடக்கப்போகிறது?*

*பகல் 12 மணிக்கு கச்சேரியில் திருக்கேதீஸ்வரம் பெரிய கோயில் இருந்து பிறகு போர்த்துக்கேயரால் அடியோடு தரைமட்டமான காணி ஏலம் போகிறது.*

*கத்தோலிக்கர்களில் சிலரும் பாதிரிமார்களோடு வந்திருக்கிறார்கள்.*

*அவர்கள் ஒரு பக்கம். சிவாச்சார்யர்கள், நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் உள்ளிட்ட சிவநேயச்செல்வர்கள் ஒரு பக்கம்.*

*ஏலம் கூறப்படுகிறது. கடைசியில் கத்தோலிக்கப் பிரதிநிதி மூவாயிரத்து ஐம்பது கேட்கிறார்.*

*அரு. பழனியப்பச் செட்டியார் எழுகிறார். மூவாயிரத்து நூறு கேட்கிறார். மூன்று முறை வெந்தீசு (ஏலம்) கேட்கப்பட்டுச் செட்டியாருக்கு நிலம் வழங்கப்படுகிறது.*

*சைவர்கள் மகிழ்ச்சியில் கூத்தாடுகிறார்கள். அது செட்டியாருக்கு வழங்கப்பட்டதால் இனி திருக்கேதீஸ்வரத்தில் இருக்கும் தேன் பொந்து மீள சைவ சமயிகள் பால் சேர்ந்திருக்கிறது.*

*ஸ்ரீ ராகவப்பிள்ளை எல்லோருக்கும் சக்கரை வழங்குகிறார்.*

*முந்நூறு ஆண்டுகள் தேவாரப்பதிக சொற் கோயிலிலேயே எழுந்தருளியிருக்கும் கௌரி நாதர் - திருக்கேதீஸ்வரம் உடையார் இனி கற்கோயிலிலும் எழுந்தருள இருக்கிறார்.*

*பலரும் இந்தியாவில் தான் அற்புதக் கோயில்கள் இருப்பதாக நினைக்கிறார்கள். அதற்கு இணையான புராணச் சிறப்பும்- திருமுறைச் சிறப்பும் உடைய கோயில்கள் எம்மண்ணிலும் இருப்பதை மறந்து போகிறார்கள்.*

*இந்த தலம் இந்தியாவிலிருந்தும் ஆண்டு தோறும் பல்லாயிரவர் வந்து வணங்கிப் பேறு பெற்ற தலம் அல்லவா? என்றும் இன்னும் பலவாறும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள்.*

*பிறகென்ன , கேதீஸ்வரத்து எம் அண்ணல் கோயில் மாதோட்டத்தில் மீள எழுச்சி பெறுகிறது.*

*அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த குமாரசுவாமிக் குருக்களைக் கொண்டு அந்நிலத்தில் கிராம சாந்தி, வாஸ்துசாந்தி செய்யப்பட்டு பழைய கோயிலின் அத்திவாரம் ஆராயப்படுகிறது*

*பழனி ஈசான சிவாச்சாரியார் மூலம் புதிய கோயிலின் வரைபடம், காரணாகம பூர்வமான வழிபாட்டு முறைகள் வகுக்கப்படுகிறது. மீண்டும் பெருங்கோயில் எழுகிறது. உலகிலேயே மிக உயரமான சோமாஸ்கந்தர் (பெரியநாயகர்) இங்கிருக்கிறார். மண்ணுக்குள் இருந்து கிடைத்த சோழர்கால மகா லிங்கமும் புதிய கோயிலில் பிரதிஷ்டையாகிறது.*

# 02. சப்பரம் ஏறினான்

*ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம். ஏற்கனவே இலங்கையில் இருந்த பெரிய சிவாலயங்கள் பலவும் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டு விட்டதால், ஆங்காங்கே ஒரு சில ஆலயங்கள் மீள உருவாக்கப்படுகின்றன.*

*எனினும் குறிப்பிடத்தக்க மத சுதந்திரமே வழங்கப் பட்டிருந்ததால், கோயிற் பெருவிழாக்களும் அங்கொன்று இங்கொன்றாகவே நடக்கின்றன.*

*ஆயினும் புராதனச்சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிற் பெருவிழா மட்டும் வெகு சிறப்பாக நடந்து வந்தது.*

*உடுவில் / சுன்னாகத்தில் முத்துக்குமார கவிராயர் என்ற இளம் தமிழ்ப்புலவர் வாழ்கிறார்.*

*"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்த செந்நாவினன் முழுத்தகையோர்க்கவை அழுத்தியோன் சுன்னாகத்துயர் மரபினன் முத்துக்குமார வித்தகன்..."*

*என்று அவரது முதன்மை மாணாக்கரான சி.வை.தாமோதரம்பிள்ளை பாடும் பெரும் கவிராயர் அவர். சுமார் ஆயிரம் தனிப்பாடல்கள் பாடிய பெருமைக்குரியவர்.*

*இப்போது இளைஞரான அவர் 1815ஆம் ஆண்டு மாவிட்டபுரத்துத் திருவிழாவுக்கு வருகிறார். இப்பகுதியாருக்கெல்லாம் தனிப்பெரும் தெய்வம் மாவைக் கந்தன் தான்.*

*வழமை போல, மாட்டு வண்டியில் பயணித்த கவிராயர் மாவிட்டபுரத்தை அடைகிறார். அங்கே மகா கோலாகலம். கந்தப் பெருமான் பெரிய சப்பறத்தில் எழுந்தருளிப் பவனி வருகிறான்.*

*நெக்குருகிப் போய் நிலத்தில் விழுந்து வணங்கிய புலவர் ஆ... என்று அதிசயிக்கிறார்.*

*அவரது வாயிலிருந்து இயல்பாகக் கவி மழை பொழிகிறது.*

*அக்கால மரபுப்படி மாவிட்டபுரத்தின் பழைய பெயர்களில் ஒன்றான "கோயிற்கடவை" என்ற பெயரில் என்று விழிக்கிறார்.*

*"நூறுநா லாறுதிருக் குடையானுங்*
*கணங்களும்போய் நுவன்று நாமங்*
*கூறிநாத் தழும்புறவே தொழும்புறுங்*
*கோவிற்கடவைக் குகனார் கண்ணீ*
*ராறினார் திருமகங் களாறினார்*
*படைக்கஞ்சா வயிலார் சங்கத்*
*தேறினார் சப்ரமஞ்சத்தேறினார்*
*அடியவரீடேறினார்"*

*அப்படி இருநூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பே சப்பரமேறிப் பெரு விழாக்கண்டவர் மாவிட்டபுரத்துக் கந்தசுவாமியார்.*

*அவருக்காக இந்த 2025ஆம் ஆண்டு பெரும் சப்பரம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். மாவை ஆதீன கர்த்தர் மஹாராஜ ஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக்குருக்களின் நெறிப்படுத்தலில் இந்த 2025 ஆம் ஆண்டு இப்பெரிய கோயில் மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.*

*உள் நாட்டுப் போராலும் அதன் விளைவுகளாலும் முப்பத்தைந்து ஆண்டுகள் தடைப்பட்டிருந்த மஹோத்ஸவம் நூதன வெள்ளி ஸ்தம்ப பிரதிஷ்டையுடன் ஆரம்பமாகியிருக்கிறது.*

*பிரம்மாண்டமான சப்பரம், மகோத்திர மகாரதம் போன்றவற்றுடனும் கற்றளி விமானத்துடன் இக்கோயில் இன்று காட்சி தருகிறது.*

# 03. அதிசய யந்திரம்

*காஷ்மீரத்தைச் சேர்ந்த துறவி கல்யாண கிரி. அத்வைத பாரம்பரியத்தைச் சேர்ந்தவராக நம்பப்படும் அவர் கந்தப்பெருமானிடம் மாறாத பக்தி மிக்கவர்.*

*வேத சாஸ்திரங்கள் மட்டுமன்றி, குமரன் பெருமை பேசும் ஸ்காந்தம் மற்றும் குமாரசம்பவம் முதலிய நூல்களையும் நன்கு கற்றவர். அவர் காலத்தில் காஷ்மீரிலிருந்தும் இலங்கையிலிருக்கும் கதிர்காமத்துக்கு யாத்திரீகர்கள் வந்து போயினர்.*

*இந்நிலையில் கல்யாணகிரி முருகன் அருள் வேண்டி கதிர்காம கிரிக்கு வந்தார். உறவு, உறக்கத்தை குறைத்து பன்னிரண்டு ஆண்டுகள் சடாக்ஷரத்தை ஜெபித்து தவம் செய்தார்.*

*வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோன் அவர் மனதில் ஒரு ஆசையை விளைவித்தான்.*

*அந்த வகையில், தங்க தகட்டில் யந்திரம் எழுதி அதில் கதிர்காம சுவாமியின் சாந்நித்யத்தை மந்த்ர பூர்வமாக உரு ஏற்றி காஷ்மீரம் கொண்டு செல்ல கல்யாணகிரி முயற்சி செய்தார்.*

*அவருக்கு ஒரு வேடுவ சிறுவனும் சிறுமியும உதவுவது வழக்கம். அன்றோ அந்த யந்த்ரத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் ஓடினர்.*

*ஓடுகிற அவர்களை பிடிக்க சுவாமிகளும் ஓடினார். அவர்களோ வள்ளியும் வள்ளிக்கு வாய்ந்த வேலனுமாய் காட்சி தந்தனர். நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான் என்பதை அவர் உணர்ந்தார்.*

*ஸ்ரீ வல்லி தேவசேனா சமேத சுப்ரம்மண்யனை- கலியுக வரதனை அவர் தரிசித்தார். அந்த குமரக்கடவுளின் அருளை பெற்றார்.*

அதன் பின் குமரவேளின் ஆணைப்படி கதிர் காமத்திலேயே ஒரு மடத்தை ஏற்படுத்தி குக பூஜை, குக பக்த சேவை இவைகளை செய்து வரும் முறைமையை உண்டாக்கினார். அவர் உருவாக்கிய யந்த்ரமே இன்றும் கோயில் கருவறையில் ரஹஸ்ய பூஜை பெறுவதாக நம்பப்படுகிறது.

கல்யாண கிரி சுவாமிகள் சமாதி நிலை பெற்ற போது அவரது உடல் முத்து போல சுயம்பு லிங்கமாக மாற அவரது பெயர் "முத்துலிங்க சுவாமிகள்" என்றழைக்கப்பட்டது.

மணிதரளம் வீசி யணியருவி சூழ- மாணிக்க கங்கை கரையில்- மருவும் கதிர் காமம் புராண பிரசித்த பெற்ற ஹேமகூடம். அருணகிரி பாடிய ஸ்தலம்.

விதிகளுக்கு அப்பாற்பட்ட, நம் விதி மாற்ற வல்ல அதிசயன் ஆறுமுகன் உறையும் அத்புத ஸ்தலம். நினைத்தாலே வரம் தரும் பதி.

ஜோதி காமேஸ்வரனாக இங்கே இறைவன் முருகன் தன்னடியார் விரும்பியவற்றை எல்லாம் அருளும் அருள் வள்ளலாகத் திகழ்கிறான்.

கல்யாணாத்புத காத்ராய காமிதார்த்த ப்ரதாயிநே
ஜோதி காம புரோாய ஸ்ரீகுமாராய தே நம:

# 04. வலிந்து கப்பலேற்றப்பட்ட மக்கள்

போர்த்துக்கேயர் வட இலங்கையை ஆண்ட காலம். கோயில்கள் எல்லாம் இடிக்கப்பட்டு விட்டன. விபூதி பூச தடை, ருத்ராக்ஷம் அணியத் தடை..

எல்லோரும் கட்டாயம் கத்தோலிக்கராகவே இருக்க வேண்டும் என்பது அரசாணை. மீறுவோர் தண்டிக்கப்படுவர்.

இத்தகு சூழலில் இந்தியாவின் கோவா மாநிலத்தில் இயற்கைப் பேரழிவு ஒன்று ஏற்பட்டது. அந்த மாநிலமும் போர்த்துக்கேயர் வசம் இருந்தது. அங்கும் தம் மத வெறி ஆட்சியை அவர்கள் முன்னெடுத் திருந்தனர்.

எனவே, கோவாவில் ஏராளம் மக்கள் இயற்கை அழிவில் இறந்ததால் தம் இன்னொரு ஆட்சிப்பகுதியான வட இலங்கையிலிருந்து மக்களை அங்கே குடியேற்ற ஆட்சியாளர்கள் திட்டமிட்டனர்.

இது போன்ற ஒரு புரட்டாதி மாதம் யாழ்ப்பாணத்தின் பலபகுதியிலிருந்தும் மக்களை கப்பலேற்றி கோவா கொண்டு செல்ல திட்டமிட்டனர்.

அவ்வகையில் வடமராட்சியின் நாகர் கோயில் பகுதி மக்களும் வலுக்கட்டாயமாக துப்பாக்கி முனையில் கப்பலேற்றப்பட்டனர்.

அவர்கள் அலறித் துடித்தார்கள். தம் வாழ்விடம் விட்டகல விருப்பமின்றி அலறினார்கள். தம் குல தெய்வமான நாகராஜரை- நாக நாதரை- நாக தம்பிரானை நோக்கி மன்றாடினார்கள்.

ஆனாலும், வலுக்கட்டாயமாக எல்லோரும் ஏற்றப்பட்டு கப்பல் புறப்பட தயாரானதும் கப்பலின் உச்சியில் நாகம் ஒன்று படம் எடுத்தது.

போர்த்துக்கேயர் துப்பாக்கியால் நாகத்தை சுட அது பல துண்டமாகி விழுந்தது. அதன் இரத்தம் மற்றும் சதையிலிருந்து நூற்றுக்கணக்கான நாகங்கள் தோன்றின..

கப்பலெங்கும் நாக மயம்..ஓடுவதா? சுடுவதா? என் செய்வது? போர்த்துக்கேயர் திணறினர். இந்த மந்திரவாதிக் கூட்டத்தின் செயல் என்று அஞ்சினர்.

எல்லோரையும் கப்பலில் இருந்து இறக்கி விட்டனர். பாம்புகளும் மறைந்தன. அதற்குள் போர்த்துக்கேயர் ஒரு கள்ள வேலை செய்தனர்.

அவ்வூரை சேர்ந்த அழகிய பெண் ஒருத்தியை மட்டும் கப்பலுக்குள் மறைத்து வைத்திருந்தனர். எனவே ஒரு பாம்பு கப்பலின் உச்சியில் நின்றது. கப்பலும் அசைய மறுத்தது.

இது ஒரு பெரும் பிரச்சினை என உணர்ந்த போர்த்துக்கேயர் அவளையும் அவளது செல்லப்பிராணியான பூனையையும் கப்பலை விட்டு தரையிறக்க - பாம்பு மறைந்தது. போர்த்துக்கேயர் தப்பினோம் பிழைத்தோம் என்று தலை தெறிக்க கப்பலில் உயிர் பிழைத்தோடினர்.

இந்த உன்னத நிகழ்வின் சாட்சியாக விளங்குகிறது வடமராட்சி கிழக்கு - நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயம். அந்த ஆலயத்தில் இந்நிகழ்வு சிலையாக வடிக்கப் பட்டிருப்பதோடு - ஆண்டு தோறும் கப்பல் திருவிழா என்ற பெயரில் நாடகமாக நிகழ்த்திக்காட்டப்படுகிறது.

# 05. தண்ணீர் தேடிய மந்திரி

அது ஆர்ய சக்கரவர்த்தியான பரராஜசேகர மஹாராஜா நல்லூரை தலைநகராக கொண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலம்.

ராஜாவின் விருப்பப்படி அவரது மருகரும் மஹாமந்திரியுமான அரசகேசரி காளிதாசர் சம்ஸ்கிருதத்தில் செய்த ரகுவம்சத்தை தமிழில் எழுதிக் கொண்டிருந்தான்.

பெரும்புலவனான அரசகேசரி அன்றைய இரவும் விளக்கொளியில் எழுத்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான்.

ஸ்ராஜ்யம் குருணாதத்தம் பிரதிபத்யாதிகம் பபௌ திநாந்தெ நிஹிதம் தேஜஸ் சவித்திரே வஹா...

என்ற ஸ்லோகத்தை

கனை கழல் வீரனுங் காவ லான்றரு
புனைமணி முடியொடும் பொலிந்து தோன்றினான்
றினகரன் றிவாந்தகா லத்திற் சேர்த்திய
வினவொளி கொடுகன லிலங்கிற் றென்னவே

என்று மொழிபெயர்த்து கவிதை எழுதி விட்டு நிமிர்கிறான். முன்னே அவன் மனைவி மரகதவல்லி நிற்கிறாள்.

”ஸ்வாமி உணவு, உறக்கம் எல்லாவற்றையும் மறந்து இப்படி இருக்கலாமா? இரவு மூன்றாம் சாம அரசவை மணி ஒலித்து விட்டது” என்கிறாள். நிலையை உணர்ந்த அரசகேசரி தன் மஞ்சத்துக்கு செல்கிறான். உறங்குகிறான். அதிகாலை நேரம் அழகிய கனவை காண்கிறான்.

கஜவதனமும் கருணை விழிகளும் கொண்ட ஆனைமாமுக ஐங்கரக்கடவுள் கனவில் காட்சி அருள்கிறார். அக்கடவுள் இன்சுவை நீர் தந்து அரசகேசரியை அருந்த வைக்கிறார்.

*விழித்த அரசகேசரி வியக்கிறான். எந்த தொடர்ச்சியுமின்றி வந்த அக்கனவு அதிசயிக்க வைக்கிறது. என்றாலும் யாரிடமும் ஏதும் சொல்லவில்லை.மறு நாள் நல்லூரிலிருந்து ராஜவீதி வழியாக தன் குதிரையில் சாலிவாடி புரம் தாண்டி தனித்து பயணிக்கிறான். திடீரென்று மிக கடுமையான தாகம்...*

*என்ன செய்வது? எங்கே தூய நீர் கிடைக்கும்? என்று தேடுகிறான். தேடியவன் ஒரு சுயம்புவான நீர் கிணறை பார்க்கிறான். மகிழ்ந்து நீரெடுத்து அருந்துகிறான். அதன் சுவையில் லயிக்கிறான். திரும்பிப் பார்க்கிறான். சிறிய குடிலில் ஆனை முக கடவுள் விக்கிரஹ வடிவில் சிரிக்கிறார்.*

*என்ற ஸ்லோகத்தைச் சொல்லி குட்டி கும்பிடுகிறான்.*

*கஜானனம் பூத கணாதி ஸேவிதம்*
*கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்*
*உமாஸுதம் சோக விநாச காரணம்*
*நமாமி விக்நேஸ்வர பாத பங்கஜம்*

*ஸ்லோகம் சொல்வது போல பிள்ளையார் பழரஸம் உண்பது போல இங்கே ரஸமான நீரை தந்து சோகம் தீர்க்கிறாரே? என்று வியக்கிறான். நன்னீர் தந்த அந்த நீரவாடீபுரம்/ நீர்வேலி மஹாகணபதிக்கு கோயில் அமைப்பதாக சங்கல்பித்துக் கொள்கிறான். கனவில் கண்டதை எண்ணி ஆனந்தம் கொள்கிறான்.*

*மஹாராஜாவுக்கு நிகழ்ந்த அதிசயத்தைச் சொல்கிறான். அவரது அனுமதியோடு கோயில் அமைத்து சுற்றிலும் அக்ரஹாரம், பூஞ்சோலை, வேத - திருமுறை மண்டபங்கள், அறநிலையங்கள் அமைக்கிறான். சுபவேளையில் வேதாகம விதி வழி மஹாகும்பாபிஷேகம் செய்கிறான். மஹா ராஜா முன்னிலையில் நிகழ்ந்த அந்த அத்புத வைபவத்தில் தான் தமிழில் செய்த இரகுவம்சத்தை அரங்கேற்றுகிறான்.*

*அப்படி அரசர்களால் துதிக்கப்பட்டவர் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார்.*

# 06. மீன் செய்த மாயம்

*அது புரட்டாதிப் பௌர்ணமி நாள் அதிகாலை நேரம். பருத்தித்துறைக்கு சமீபமாக உள்ள கற்கோவளம் பெருங்கடலோரம் பெண் ஒருத்தி தவம் செய்து கொண்டிருக்கிறாள்.*

*வயதில் இளைய அவள் பெயர் இளவல்லி. அழகு மிக்கவள். திருமணமானவள் என்பதற்கு அடையாளமாக அவள் நெற்றியில் திலகமும் மார்பில் தாலியும் துலங்குகிறது.*

*ஆனாலும் அவள் இயல்பாக இல்லை. ஏதோ கடும் தவத்தில் இருக்கிறாள். யாரேனும் கடற்கரை மணலில் தவம் இருப்பார்களா?*

*எல்லோரும் விசித்திரமாகப் பார்க்கிறார்கள். ஏதேதோ பேசுகிறார்கள். அவள் தன் பாட்டில் கண்களை மூடி தவம் செய்கிறாள்.*

*சூரியன் மேலெழத் தொடங்கியது. இளவல்லி ஆடாமல் அசையாமல் இருக்கிறாள். அவளது உதடுகள் "ஓம் நமோ நாராயணாய" என்று சொல்லிக் கொண்டே இருக்கின்றன.*

*திடீரென்று ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. அவளது மடி மீது மீன் ஒன்று பாய்ந்து விழுகிறது. விழுந்த வேகத்தில் (மனித) குழந்தையாகிறது.*

*அதை பார்த்த மீனவர்கள் காண்பது கனவா? என்று கண்களை கசக்கி விட்டு அதிர்ச்சியோடு பார்க்கிறார்கள்.*

*அடுத்த நிமிடம் குழந்தையையும் காணவில்லை. இவளோ தொடர்ந்து தவத்தில் மூழ்கி இருக்கிறாள்.*

*சில நிமிடங்களில் ஒரு பிராமணர் வருகிறார். வெள்ளை பஞ்சகச்சமாக கட்டிய வேஷ்டி, மேலே உத்தரீகம், கண்களில் ஒளி, புன்முறுவல், பூணூல் அணிந்த மார்பில் துளசி மாலை, நெற்றியில் திருமண்...*

அந்த ஊருக்கு புதியவர். அந்த அழகான கம்பீரமான பிராமணரை இது வரை எவரும் கண்டதில்லை. அந்த இடத்திற்கு மீன் வாங்க தான் வருவார்கள். இவர் ஏன் வருகிறார்?

ஏதோ இன்றைக்கு எல்லாம் அதிசயமாக இருக்கிறதே? என்று பேசிக் கொண்டார்கள். வந்த பிராமணர் இளவல்லி அருகில் வருகிறார். அவளை அன்போடு தொடுகிறார்.

கண்களை திறந்த இளவல்லி அந்த பிராமணோத்தமரை கண்டதும் மகிழ்ந்து வணங்க, அவள் கையில் ஒன்றை அவர் கொடுக்கிறார்.

“நீ எண்ணியது நிறைவேறும். சந்ததி விருத்தியாகும். இந்த சக்கரத்தையே பெருமாளாக வழிபடு. கண்ணன் அருள் எல்லோரையும் காக்கும். மங்களானி பவந்து..” கட கட என்று பேசிய அவரை திடீரென்று காணவில்லை.

பகவான் ஸ்ரீ மந் நாராயணனே எல்லா லீலைகளையும் செய்தான் என்று எல்லோரும் வியக்கிறார்கள்.. கோவிந்தா.. கோவிந்தா என்ற சப்தம் அந்த கடற்கரை எங்கும் கேட்கிறது.

சிறிய பல்லக்கு ஒன்றை அமைத்து அதில் சக்கரத்தை வைத்து தங்கள் ஊரில் வைத்து வழிபடுவதற்காக எடுத்துச் செல்ல முற்பட்டார்கள்.

மக்கள் கூட்டத்தின் மத்தியில் சக்கர பவனி தொடங்குகிறது. ஓரிடத்தில் அரச மரக்கூடலில் சக்கரத்தை வைத்து விட்டு இளைப்பாறுகிறார்கள்.

மீண்டும் பயணிக்க முற்பட்ட போது அந்த சிறிய சக்கர பல்லக்கை தூக்கவே முடியவில்லை. அதுவே அப்பெருமான் எழுந்தருள வேண்டிய இடம் என்று பெருமாள் ஒரு பக்தரிடையே தோன்றி அருள்கிறார்.

அந்த இடத்தில் பக்தி பூர்வமாக சிறு குடில் அமைத்து சக்கரப் பிரதிஷ்டை நடக்கிறது. அந்த சக்கரம் சுதர்சனம் மட்டுமல்ல. அதுவே திருமால். பெருமாள். அந்த தலம் வல்லிபுரமாகிறது.

# 07. நெல் மூட்டைக்குள் கிடைத்த பொருள்

*1840 களில் குப்பிளான் பகுதி மக்கள் பெருமளவில் வன்னியில் விவசாயம் செய்வது வழக்கம். அப்படி விவசாயம் செய்து பெற்ற அறுவடையை மூட்டைகளாக கட்டி ஊருக்கு கொண்டு வருவர்.*

*அப்படி வண்டிலில் மீளவும் ஊருக்குப் போகிற போது வழியில் நீர்வேலியிலுள்ள வீதியோரக்காணி ஒன்றில் தங்கி இளைப்பாறி மீண்டும் பயணிப்பர். அதற்கு காரணம் நீர்வேலியில் குறித்த காணியில் சிறு குளம் இருந்தது. நிழலும் இயல்பான சாந்தியும் அங்கு நிலவியது.*

*இப்படி அந்த இடத்தில் தாம் இளைப்பாறும் போது விவசாய அறுவடையான நெல்லு மூட்டைகளையும் இறக்கி வண்டிலிலிருந்து மாடுகளை அவிழ்த்து அவற்றையும் இளைப்பாற வைப்பர்.*

*இப்படித் தான் ஒரு நாள் ஒரு குழு வந்து இளைப்பாறி மீண்டும் நெல் மூட்டைகளை வண்டியிலேற்றியது.*

*ஆனால், ஒரு மூட்டை மட்டும் அசைய மறுத்தது. அதற்குள் நெல் மட்டுமல்ல.. குட்டிப் பிள்ளையார் சிலையும் இருந்தது..*

*எப்படி வந்தது ..?*

*அவர்கள் வன்னியிலிருந்து ஒரு பிள்ளையார் விக்கிரகத்தை தம் ஊரில் வைப்பதற்காக நெல்லு மூட்டைக்குள் வைத்துக் கொண்டு வந்திருந்தார்கள்.*

*இப்போது அந்த மூட்டையைத் தான் தூக்க முடியவில்லை. என்ன செய்வது ? பிள்ளையாரின் விருப்பம் இது தான் போலும்! என்று அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார்கள்..*

*குறித்த காணிக்காரரான சுப்பிரமணியர் குருநாதருக்குச் செய்தி பறந்தது. அவர் ஓடோடி வந்தார்.*

*குருநாதர் தம் குருவான நீர்வேலி சிவசாமிக்குருக்கள் முத்துசாமிக்குருக்களோடு ஆலோசித்தார். இவ்விருவரின் இணைவில் பிள்ளையார் பக்தர்கள் திரண்டனர்.*

*பிறகென்ன.. "மூத்த நயினார் வளவு" என்ற இயல்பான பெயர் கொண்ட அவ்விடத்தில் பிள்ளையாருக்குக் கோயில் எழுந்தது. 1880களில் எல்லாம் இக்கோயில் சிறிதளவில் ஒரு வடிவமைப்பைப் பெற்று விட்டதாம். காணிக்காரரின் விருப்பப்படி கோயிலைக் குருக்கள் முறைப்படி பூசிப்பதோடு பரபாலனமும் செய்யலானார்.*

*பெரும் வாய்க்கால் அருகே கோயில் எழுந்ததால் இது வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோயில் ஆனது.*

*இதே காலப்பகுதியில் நீர்வேலியிலிருந்து கந்தையினார் என்பவர் தம் குழுவோடு கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செய்கிறார். காட்டில் தனித்து வழிதவறிப் போகிறார். மதயானையால் துரத்தப்படுகிறார். யாருமற்ற அக்காட்டில் ஒருவர் வந்து வேல் ஒன்றை இவர் கையில் கொடுத்து வழிநடத்துகிறார். சுகமாக கதிர்காமம் சென்று சேருகிறார். யாத்திரை முடித்து தம்மூருக்கு வந்ததும் தாம் பெற்ற வேலைக் கோயில் கட்டிப் பிரதிஷ்டிக்கிறார். அது நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலாகிறது.*

*ஒரு பெண் சந்நியாசியாரால் நீர்வேலியில் கதிர்காம சுவாமி கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ்வாறு கோயில்கள் நிறைந்த ஊரானதால் மதமாற்றம் பெரிதும் நிகழாத இடமாயிற்று.*

*இலங்கையிலேயே வாழைக்குலைக்கு இந்த நீர்வேலியிலேயே தனிச் சந்தை காணப்படுகிறது என்பதையும் நீங்கள் அறிவீர்களா?*

# 08. உரு எடுத்த முருகு

இணுவில் கந்தசுவாமி கோயிலில் நூறாண்டுகளுக்கு முன் அர்ச்சகராக இருந்தவர் பிரமஸ்ரீ. சின்னையர் என்பவர்.

அவர் தம் பணம் முழுவதையும் செலவு செய்து மயிலில் இருக்கும் கோலத்தில் வல்லி தேவசேனாவுடன் ஒரு ஷண்முகரை வார்ப்பிக்க முயன்றார்.

ஆனால், திறமையான ஆசாரியார் ஒருவர் மூலம் இரண்டு முறை வார்க்கப்பட்டும் விக்கிரகம் சரியாக அமையவில்லை.

அர்ச்சகர் கோயில் முதலாளியுடன் கலந்தாலோசித்தார். இருவர் நினைவிலும் பெருமான் நின்ற கோலத்தில் (திருச்செந்தூர் வடிவத்தில்) எழுந்தருள விரும்புவதாகவே உணர்த்தினான்.

அர்ச்சகரும் அவர் மனைவியும் மடிப்பிச்சை எடுத்து குமரப்பெருமானுக்கு திருவமுது நெய்வேதித்ததுடன் இம்முறை நின்ற கோல பிரான் வார்ப்பிக்கப்பட்டார்.

அளவுப் பிரமாணம் கூட பெருமானின் உத்தரவுப்படி அவர் குக்குடாசனத்தில் இருக்க அந்த அளவே சுவாமியின் உயரமாக தீர்மானிக்கப்பட்டதாம் என்பர்.

பெருமான் உருவாவதை கண்டு உருகிப்போன அர்ச்சகர் மனைவி தன் நிலை மறந்து கழுத்தில் கிடந்த ஒரே நகையான தாலியையும் சண்முக விக்கிரகத்தின் உருவாக்கப் பாத்திரத்தில் போட்டார்.

இப்படி உருவான இணுவில் ஷண்முகரே திருத்தேரிலும் உலகப்பெரு மஞ்சத்திலும் திருவுலாக் காண்கிறார்.

உருவும் திருவும் அருளும் பொலியும் ஆறுமுக வள்ளல் அவர். சுமார் நூற்றைம்பதாண்டுகள் பழையவர். ஆனால் அடியார்க்கு என்றும் புதியவர்.

# 09. ஓயாத ஓட்டம்

*30.10.1995 க்கு சமமான ஐப்பசி மாதம் 13ஆம் நாள், திங்கட்கிழமை, வளர்பிறை சப்தமி.*

*முதல் நாள் தான் கந்தசஷ்டி விரதம் முடிந்து அன்றைக்கு காலையில் பாரணை.*

*முதல்நாள் நல்லூர் கந்தசுவாமியாரின் சூரசம்ஹாரத்தைப் பார்த்திருக்கிறோம். அந்த ஆண்டு சுவாமி வெளி வீதிக்கே வரவில்லை. உள்வீதி கேணியடியில் தான் சூரன்போர். சம்ப்ரதாயத்திற்காக நடந்த அந்த உற்சவம் ஒரு சில நிமிடங்களில் முடிந்து விட்டது.*

*இதற்கு முந்தைய ஒரு மாத காலம் கூட மிகப் பயங்கரமாகவே இருந்தது.*

*இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல அன்று யாழ்ப்பாணத்தின் பெரும் இடப்பெயர்வு...*

*ஆயிரமாயிரமாக இலட்சக்கணக்கான மக்கள் கையிற் கிடைத்த பொருட்களோடு எங்கு செல்கிறோம்? நாளை எங்கு வாழ்வோம்? எதனை உண்போம்? எதனை உடுப்போம்? என்று ஏக்கங்களோடு இடம்பெயர்ந்த நாள்...*

*நினைதொறும் கண்ணீரை ஆறாய் பெருக்கும் நாள்...*

*அன்று ஓரிரவில் எந்த முன் ஆயத்தமும் இன்றி, இடம்பெயர்ந்தவர்கள் ஐந்து இலட்சம் என்கிறார்கள்.*

*இப்படி இடம்பெயர்ந்த இலட்சம் மக்களின் இருப்பிடங்களாக கோயில்களே இருந்தன.*

*நீர்வேலியிலிருந்து நல்லூர் சிவன் கோயிலில் தஞ்சமடைந்திருந்த எங்கள் குடும்பமும் அப்படித் தான் அடுத்த*

இடம் பெயர்பெயர்ந்தது. உசனுக்கு அப்பால், விடத்தற்பளையில் வயல் நடுவே ஒரு சிறிய முருகன் கோயில்.

மக்கள் நடமாட்டமற்ற காடும் வயலும் கலந்திருந்த அப்பகுதியில் அந்த முருகன் கோயில் அருகே குடிசை போட்டு கொண்டு ஆறு மாதம் வாழ்ந்தோம்.

அப்போது இக்கோயிலில் அர்ச்சகராக இருந்தவர் உசன் கந்தசுவாமி கோயிலை சேர்ந்த ஜோதிடர். பிரம்மஸ்ரீ சுப்ரமண்யசர்மா.

அவர் நீங்களே இருக்கும் வரை பூஜையை செய்யுங்கள் என்று பெரியமனதோடு விட்டு விட அந்த சுவாமிக்கு பூசை பண்ணிக் கொண்டு அங்கேயே இருந்தோம்.

அப்போது எனக்கு வயது ஐந்து அல்லது ஆறு. எனவே நாளை பற்றிய கவலை நமக்கேது?

இந்த விடத்தற்பளை ஆலய மூர்த்தி யாரென்று நினைக்கிறீர்கள்?

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நல்லூர் கந்தசுவாமி கோயில் கருவறையில் பிரதிஷ்டிப்பதற்காக தமிழகத்திலிருந்து வருவித்த அழகிய மூர்த்தி.

அக்கால கோயில் எஜமானர் வேலுக்கு பதிலாக மூலவராக அந்த மூர்த்தியை ஏற்க மறுத்ததால், மன விரக்தியுற்று எங்கெங்கோ கொண்டு திரிந்து அங்கே பிரதிஷ்டை பண்ணிய மூர்த்தி.

அப்போது வலிகாமத்தில் ஆயுத தாரிகள் தவிர பொதுமக்கள் இல்லை. எனவே கோயில்கள் எல்லாம் மூடிக்கிடந்தன. இந்த நிலையில் விடத்தற்பளை முருகன் கோயில் அடுத்த சில மாதங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தங்குமிடமாக மாறி இருந்தது.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் இராஜேந்திரக்குருக்கள் அந்த விடத்தற்பளை அழகிய மூர்த்தியை பார்த்து ஆற்றாமையால் விக்கி விக்கி அழுதது எனக்கு இன்றும் ஞாபகமிருக்கிறது.

ஸ்ரீ வல்லி தேவசேனையோடு விளங்கும் அந்த வயல்கரை வள்ளல் தான் எங்களுக்கு இருக்க இடமும், உண்ணச் சோறும், தந்து ஆறு மாதம் பேணிய பெருமான்.

இது மட்டுமல்ல என் மனைவியின் குடும்பமும் இடம்பெயர்ந்து உசனில் தான் அடைக்கலம் புகுந்தார்களாம். அவர்களும் அக்காலத்தில் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டிருக்கிறார்களாம்.

இப்படி அவரவர் வழிபட்ட கடவுளரே அவரவரை காத்தனர் என்று சொல்வர்.

நல்லூர் பெருமான் எப்படி எல்லாம் கருணை செய்வான் ? ஒவ்வொருவரிடமும் கேட்டுப்பாருங்கள்.

அவனுக்கும் எங்கள் நீர்வேலி முருகனுக்கும்- கதிர்காம மூர்த்திக்கும்- அந்த வயற்கரை வள்ளலுக்கும் என்ன வித்தியாசம்? ஒன்றுமில்லை. ஒரு நாமம் ஒருருவம் இல்லான் ஓராயிரம் உருக் காட்டி ஆடல் செய்கிறான்.

ஏ9 வீதியால் உசனைக் கடந்து பயணிக்கிற போது உசன் வழியாக விடத்தற்பளை என்ற சிற்றூரில் இன்றும் சிறுகாடும் வயலும் கலந்திருக்கும் பகுதியில் வயற்கரை முருகவேளின் திருக்கோயில் உள்ளது.

உசனிலும் நல்லூர் போலவே வேற்கோட்டமான கந்தசுவாமி கோயில் இருக்கிறது. நல்லூருக்கு என்று கொண்டுவரப்பட்ட சிறிய சண்முகர் திருவுருவம் வண்டில் சக்கரம் உடைந்ததால் இங்கேயே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்றும் ஒரு கதையுண்டு.

# 10. காதல் தந்த கோயில்

*உக்கிரசிங்கன் என்ற கலிங்க அரசன் கதிரமலையை (கந்தரோடை) தலைநகராக கொண்டு ஆட்சி செய்த காலம். (8ஆம் நூற்றாண்டு)*

*சோழ இளவரசி மாருதபுரவீகவல்லி தன் நோய் நீங்க தல யாத்திரை செய்து கொண்டிருந்தாள். அவளது நோய் நகுலேஸ்வர தரிசனத்தின் பின் மாறியதாம்.*

*இப்போது அவள் பேரழகி. அவளது அழகு பற்றிய பேச்சு உக்கிரசிங்க அரசன் காதை எட்டியது. நேரில் கண்ட போது காதல் பிறந்தது. கல்யாணம் நடந்தது. ஆனால், மாருதப்புரவீக வல்லியின் சில ஆசைகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசனைச் சேர்ந்தது.*

*அவளது விருப்பங்களில் முக்கியமானது கந்தவேளுக்கு பெருங்கோயில் அமைப்பது. விருப்பப்படி கோயில் எழுந்தது. அவள் சோழ தேச இளவரசி ஆதலால் சோழ தேசத்திலிருந்து விக்கிரகங்கள் வந்தன.*

*அது மட்டுமல்ல, அவளது தந்தையான சோழ அரசன் தம் குல குரு மரபான தில்லை வாழந்தண மரபில் பெரியமனதுளார் என்ற தீட்சிதரையும் குடும்பத்தோடு கோயிலுக்காக அனுப்பி வைத்தான்.*

*மாவிட்டபுரம் எழுந்தது. அங்கு ராஜா எழுப்பிய கோயில் ஆனி உத்தர நாளில் குடமுழுக்கு கண்டது. கோயில் நிர்வாகம் மற்றும் குருத்துவம் தீட்சித மரபினரிடம் ஒப்படைக்கப்பட்டது.*

*காலம் ஓடியது. அரசுகள் மாறின. காட்சிகள் மாறின. ஆனால் மாவை கந்தன் ஆட்சி இன்றும் நடக்கிறது. அதே பெரியமனதுளார் வம்சம் மாவை ஆதீனமாக இன்றும் திகழ்கிறது.*

*அத்தல ஷண்முகநாதன் மகோத்தர மகாரதத்தில் பவனி வருவதும் கண்டகி மகா சமுத்திரத்தில் தீர்த்தவாரி காண்பதும் காண வேண்டிய காட்சிகள்.*

# 11. தீவு நகரம் ஆகிறது

தமிழகத்தில் காரைக்கால், காரைக்குடி, காரைக்குறிச்சி என்றெல்லாம் ஊர்கள் உள்ளன. இலங்கையில், மூன்று இடங்களில் காரை தீவுகள் உள்ளன.

ஆனால், காரை நகர் என்றே அரச ஆவணங்களில் எல்லாம் பதிவு செய்யப்பட்டுள்ள ஊர் காரை நகர் தான்.

1922 ல் சேர். பொன். இராமநாதன் இங்கே அப்போதைய காரைதீவுக்கு வருகிறார். அங்கே மக்கள் இலங்கை மக்களின் தனிப் பெரும் பிரதிநிதியை அன்போடு வரவேற்கிறார்கள்.

வரிசையாக நின்று மங்கல வாத்திய கலைஞர்கள் தவில்-நாதஸ்வர இசை வழங்க, பூரண கும்பங்களோடும் ஆரத்திகளோடும் ஆடவர்களும் மங்கையர்களும் இராமநாதனை வரவேற்கிறார்கள்.

அவர் ஈழத்துச் சிதம்பரம் என்ற திண்ணபுரத்து சிவன் கோயில் முதலாக ஊர் முழுவதும் பெருங்கோயில்கள் எழுச்சி பெற்றிருக்க காண்கிறார்.

காக்கை பறக்காத ஊரும் இல்லை காரைதீவார் இல்லாத ஊரும் இல்லை என்று பழமொழி போல திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் இந்த மக்களின் உழைப்பையும் ஊக்கத்தையும் சைவப் பற்றையும் கண்டு வியக்கிறார். வாழ்வியற் சிறப்பையும் காண்கிறார். அவர் மகிழ்ந்து "இனி இது காரைதீவு அல்ல. காரைநகர்" என்று பெயரிடுகிறார்.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் வரவேற்பு மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயம் கடந்து நடைபெற்றது.

இந்நிலையில் கும்பநாயகிக்கு விசேஷ ஆராதனை நடக்கிறது. அங்கே அந்த ஆராதனையை நிகழ்த்திய அர்ச்சகரின்

தோற்றம், மந்திரம், கிரியை, பாவனையில் இராமநாதன் மயங்கிப் போகிறார்.

இப்படி ஒரு சிறு தீவுக்கோயிலில் இத்தகு அறிவாற்றல் பொருந்திய அர்ச்சகர்கள் இருக்கிறார்களா? என்று வியந்து அவரிடமே "உங்கள் மரபு, இக்கோயில் வரலாற்றை சுருக்கமாக சொல்லுங்கள்..." என்று கேட்கிறார். அர்ச்சகர் பேசுகிறார்...

"கி.பி 1200களில் யாழ்ப்பாணத்தில் ஒரு சைவத்தமிழ் அரசு சிறந்து விளங்கியது. அது போல கிழக்கிலங்கையில் குளக்கோட்டனின் அரசு சிறப்புற்றிருந்தது. இதே போல வன்னியிற் சிற்றரசுகளும் கண்டி அரசும் தென்னிலங்கையில் கோட்டை அரசும் காணப்பட்டன. இவற்றின் விளைவாக பௌத்த, சைவ, வைணவ, சமயங்கள் தீவெங்கும் பொலிவோடு திகழ்ந்தன.

விகாரைகளும் கோயில்களும் எழுந்தன. ஏற்கனவே இருந்த கோயில்கள் புனரமைக்கப்பட்டன. திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் முன்னேஸ்வரமும் நகுலேஸ்வரமும் இன்னும் பல கோயில்களும் நிமிர்வுற்றன.

இக்கோயில் கைங்கர்யங்களை ஆற்ற சிவாச்சார்யர்களும் வைதிகர்களும் பஞ்சாங்க கணிதர்களும் இசை ஆற்றலாளர்களும் நடன மங்கையரும் ஓதுவார்களும் சிற்ப வல்லுனர்களும் பண்டாரகர்களும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர்.

குளக்கோட்டன் கிழக்கிலங்கையில் நிறைய திருப்பணிகள் செய்யினும் அவனது திருப்பணி வடக்கே பொன்னாலை வரை நீண்டது. சிவ பக்தனான அவன் பெருமாளின் கூர்மாவதாரத் திருத்தலமான பொன்னாலைப் பெரிய கோயிலை ஏழு வீதிகளுடன் பிரம்மாண்டமாகத் திருப்பணி செய்தான்.

வரதராஜப்பெருமாள் எழுந்தருளியிருக்கும் இக்கோயிற் பூஜைக்காக காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீ வத்ஸ கோத்திரத்து அந்தணர்களை அழைத்து வந்து குடியேற்றினான்.

கும்பகோணத்திலிருந்து உடுவில் பகுதியில் கௌண்டின்ய கோத்திர மரபார் குடியேறினர். நல்லூரில் யாழ்ப்பாண அரசனின் விருப்பத்திற்கமைய கைலாசநாதர் கோயில் உருவானது. அக்கோயிற் கும்பாபிஷேகத்திற்காகவும் ராஜ குரு காஸ்யப கோத்திரத்து கங்காதரப்பட்டரும் அன்னபூரணி அம்மாளும் வரவழைக்கப்பட்டனர்.

இதே வேளை குளக்கோட்ட அரசனின் ஆதரவுடன் காரைநகர் என்ற காரைதீவு வியாவிலில் ஐயனாருக்குக் கோயில் எழுந்தது. அக்கோயில் பூஜைக்காக காரைதீவைச் சேர்ந்த முத்துமாணிக்கச் செட்டியார் திருவுத்தரகோசமங்கையிலிருந்து பாரத்வாஜ கோத்திரத்து சிவாச்சார்யர்களை அழைத்து வந்து குடியேற்றினார்.

இப்படி தான் வெவ்வேறு குடிகளும் குடியேறுகிறார்கள். தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களில் இங்கும் ஊர்ப்பெயர்கள் உருவாகின்றன. பிறகு நூறு இருநூறு ஆண்டுகளில் இலங்கையின் பெரும்பகுதி போர்த்துக்கேயர் வசமானது.

இக்காலத்தில் எல்லா சைவக்கோயில்களும் இடிக்கப்பட்டு விட்டன. வெளிப்படையாக சைவ வழிபாடுகள் செய்ய போர்த்துக்கேய அரசின் கடுமையான தடை இருந்தது. மீறியும் வழிபாடு செய்வோர் பிடிபட்டால் கடும் தண்டனை வழங்கப்பட்டது.

இத்தகு சூழலில் அம்மை / வைசூரி நோய் யாழ்ப்பாணம் எங்கும் பரவியது. கட்டுப்படுத்த இயலாது பரவிய அந்த நோய் காரணமாக பெருமளவு உயிரிழப்புகள் உண்டாயின.

இந்த அமளிக்குள் கடலால் பிரிக்கப்பட்டிருந்த காரைதீவில் (காரைநகர்) மணற்காட்டாகிய இங்கு ஒரு மாரியம்மன் கோயில் சிறிதாக கட்டப்பட்டு திருவுத்தரகோச

மங்கையிலிருந்து வியாவிலுக்கு வந்திருந்த குருக்கள்மாரால் கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

இதை போர்த்துக்கேயர் அறிந்த போதும், அவர்களால் கட்டுப்படுத்த இயலாத அளவு தொற்று நோய் பரவியிருந்ததால், அக்கோயிலுக்கு எதிராக ஏதும் செய்யாதிருந்தனர். இந்த முத்துமாரி அன்னையின் அருளால் காரைதீவில் அம்மை நோய் முற்றாக அழிந்து போனது.

இந்த மணற்காடு கும்ப நாயகி முத்துமாரி அம்பாளின் திருக்கோயில் இன்றும் காரைநகரில் எழிலுறத் திகழ்கிறது.

குளக்கோட்டன் காலத்தில் வந்த பாரத்வாஜ கோத்திர அர்ச்சகர் மரபினரே நாங்கள்.."

இப்படி அர்ச்சகர் சொல்ல வியந்து போனார் இராமநாதன்.

இன்னமும் இங்கே அறிந்து கொள்ள நிறைய இருக்கிறது என்று சொல்லி அர்ச்சகருக்கு விசேடமாக சம்பாவனை - கௌரவம் செய்து மகிழ்ந்தார்.

**12.09.1923** ல் இந்த காரைநகர் என்ற பெயர் அடுத்த ஆண்டு அப்போதைய ஆங்கிலேய அரசால் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

என்றாலும் **1940** களிலும் சில ஆவணங்களில் காரைதீவு என்று பாவித்திருக்கிறார்கள். உதாரணமாக பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள்....

எவ்வாறாயினும், ஐம்பதுகளுக்குப் பிறகு பரவலாக காரைநகர் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது ..

# 12. நினைத்ததை முடிப்பான்

*பொ (கி).பி 1730 ஆண்டு இருக்கும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலம். அரசில் செல்வாக்குடன் அரசில் சிறாப்பர் பதவியிலிருந்தவர் தொன் யுவான் மாப்பாண முதலியார்.*

*அவர் குதிரை வண்டியில் வேலைக்குப் புறப்படத் தயாராகிறார். வீட்டு வாசலில் ஒரு ஐயர்  தயக்கத்தோடு வந்து நிற்கிறார்.*

*பஞ்சகச்சத்தோடு வந்து நிற்கும் அந்த பிராமணரை பார்த்ததும் வணங்கி மலர்ச்சியுடன் உள்ளே வரவேற்கிறார் முதலியார். இந்த வரவேற்பை எதிர்பாராத பிராமணர் அதிர்ச்சியோடு உள்ளே வருகிறார்.*

*முதலியாரின் மனைவியும் வந்து வணக்கம் சொல்கிறார். பிராமணர் நிமிர்ந்து பார்க்கிறார். மாப்பாணர் மனைவி திலகம், விபூதி, தாலியுடன் திகழ்கிறார். முதலியாரை கவனமாக பார்க்கிறார் அவர் நெற்றியில் விபூதி தெரிகிறது.*

*முதலியார் கிறிஸ்தவ பெயரில் கிறிஸ்தவர் போல இருந்தாலும் உளத்தால் சைவர் என்பதை உறுதி செய்து கொண்ட வந்த கிருஷ்ணையர் தனக்கு ஒரு உதவி வேண்டும் என்கிறார்.*

*முதலியார் பணிவுடன் என்ன? என்று கேட்க, நல்லூரில் பிராமண வளவு என்ற தமது காணியில் முருகனுக்கு கோயில் அமைக்க அரசிடம் அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்கிறார்.*

*கண்களில் நீர் கசிய, மெய் சிலிர்த்துப் போன முதலியார் வாயில் " அது என் பாக்யம் .. பாக்யம்" என்ற சொற்களே வெளி வருகிறது.*

*பிறகென்ன, அந்த தொன் யுவான் மாப்பாண முதலியார் தன் செல்வாக்கை பயன்படுத்தி ஒல்லாந்த அரசிடம் அனுமதி பெற்றார்.*

*இருவருடன் முருக பக்தர்களும் இணைந்தனர். அம்பலவாணர் சுப்பிரமணியம் என்று முருகன் பெயரில் காணித் தோம்பை பதிந்து, அரச அனுமதி வாங்கி கோயில் கட்டினர். கும்பாபிஷேகம் செய்தனர். மாப்பாண முதலியார் இரகுநாத மாப்பாண முதலியார் என்ற உண்மைப் பெயருக்கு மாறினார்.*

*காலம் ஓடியது. கோபுரங்கள் எழுந்தது. உயர்ந்த மதில்களுடன் பிரகாரங்கள் ஏற்பட்டது. தேரோடியது. நல்லூர் கந்தசுவாமி கோயில் நிமிர்ந்தது. அவனது அருளாட்சி நல்லூரை தலமாக கொண்டு அகிலமெங்கும் நடக்கத்தொடங்கியது.*

*தங்க விமானமும் தங்க வாகனங்களும் முத்தங்கியும் பொலியும் அற்புதக் கோயிலிது. இக்கோயிற் பெருவிழா வடபுலத்தின் தேசியத் திருவிழா. என்றும் மாறாத நேர ஒழுங்காலும் அழகுணர்ச்சியாலும் முகாமைத்துவத் திறனாலும் ஆண்டியும் அரசனும் ஒன்றுபோலவே தரிசிக்கும் முறைமையாலும் நல்லூர் உலகப்புகழ் பெற்றிருக்கிறது.*

*சித்தர்களும் அரசியலாளர்களும் யாவரும் ஓடிவந்து கைதொழ அருளும் பேரிறைவனாக நல்லூக் கந்தசுவாமியார் காட்சி தருகிறார்.*

*“அலங்காரா நல்லூரரா”*

# 13. எளியார்க்கும் எளியன்

*இருநூறாண்டுகளுக்கு முன் வடமராட்சியில் தொண்டமனாற்றங்கரையில் ஒரு மீனவர் மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்.*

*அவர் அழகு முருகனேயே என்றும் சிந்திக்கும் அதி பக்தர். அவர் மீன் பிடிக்கும் பகுதியில் ஒரு சிறு முருகன் ஆலயம் இருந்தது.*

*அது ஒரு காலத்தில் புராணப் பிரசித்தமான கோயிலாம். இப்போது இடிந்து போய், பூசை கூட இல்லாமல் சிறிய சந்நதியாகப் பூட்டிக்கிடக்கிறது.*

*அந்த சந்நதியில் காட்சி தரும் கந்தனை மனதில் வைத்து அன்றும் என்றும் போல மீன்பிடித்தொழிலில் மருதர் கதிர்காமர் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.*

*புதிதாக அந்தப்பகுதிக்கு வந்த ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் அவரிடம் " ஏன் நீ இந்த முருகனுக்கு பூசை செய்யக்கூடாது?" என்று கேட்டான்.*

*கதிர்காமருக்கோ தமிழ் கூட எழுத வாசிக்கத்தெரியாது. அவர் இந்த சிறுவனின் பேச்சைக் கேட்டு அதிர்ந்து போனார். நகைத்து "இவன் ஒரு முட்டாள் சிறுவன்..." என்று நினைத்தார்.*

*ஆனால், அவனோ இருக்க கண்ணை மூடு என்றான். இவர் கண்ணை மூட ... கண்ணனின் வாயில் அகில உலகமும் தெரிந்தது போல.. இவரோ கதிர்காமம் போய் முருகனை கண்டு எங்கெங்கோ சுற்றி இரகசியங்களை எல்லாம் கண்டு மீண்டும் வந்திருந்தார்.*

*மாயமோ, மந்திரமோ, என்ன நடக்கிறது? ஏது நடக்கிறது? என்று புரியாத கதிர்காமருக்கு அவர் கதிர்காமத்தில் பெற்ற வேல் கையிலிருந்தது அதிசயமானது.*

*அதிசயம் செய்த சிறுவன் முருகன் என்று உணர்ந்த போது அந்த பெருமானின் காட்சி மின்னி மறைந்தது. தொடர்ந்து கதிர்காமரின் முயற்சி இன்றி கோயில் திறப்பு அவர் கைக்கு வந்தது.*

*தொடர்ந்து நடக்கும் அதிசயங்களால் சந்நதியின் பெருமை எங்கும் பரவியது. வாய் கட்டி மந்திரமின்றி மருதர் கதிர்காமர் மரபார் செய்யும் பூசை நிலை பெற்றது.*

*கோயிலைச் சுற்றி பலப்பல மடங்கள் தோன்றின. சித்தர்கள் வாழும் பதியானது. தினசரி வழிபாடுகள் மட்டுமன்றி ஆவணிப் பெருவிழாவும் தொடங்கியது.*

*யாத்திரீகர்கள் பல்லாயிரக்கணக்கில் சந்நதியை நாடினர். ஒற்றைச் சந்நதி ஆக இருந்த தலம் செல்வச்சந்நதியாக ஒளி வீசியது. குறைவிலா அன்ன தானங்கள் நிறைந்த மடங்கள் நிறைந்த சூழல் தலமாதலில் "அன்னதானக்கந்தன்" என்ற சிறப்பும் ஏற்பட்டது.*

*எந்நிதியும் தருவான் செல்வச் சந்நதியான்.*

# 14. கண் கொடுத்த கடவுள்

நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதிய பெரும்புலவர் உடுப்பிட்டி சிவசம்புப்புலவர். அவர் இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் புகழ்பெற்ற புலவர். இராமநாதபுரம் சேதுபதி மன்னரினால் பாராட்டப் பட்டவர். தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டித்துரைத் தேவரின் நட்பைப் பெற்றவர்.

இத்தகு புலவர் தம் குல தெய்வமான பொலிகண்டி கந்தவனக்கடவை கல்யாண வேலவர் கோயிலுக்கு போகிறார். மாட்டு வண்டிலில் போன புலவர் கந்தவன கோயில் வீதியில் இறங்கியதும் நடக்கவே சிரமப்படுகிறார். உதவியாளரின் உதவியுடன் கோயிலின் உள்ளே நுழைகிறார். நூற்றுக்கணக்கில் பாடல்களை எழுதிக்குவித்த புலவருக்கு கண்களே தெரிவதில்லையாம். எத்தனையோ மருத்துவம் செய்தும் பலனில்லையாம். பலரும் அவரை வேதனையோடு பார்க்கிறார்கள்.

இந்த தலம் அருணகிரியார் திருப்புகழ் பாடிய தலம். அக்கோயில் குளத்தில் ஒரு காலத்தில் கற்பூரம் விளைந்ததாம். சமுத்திரக்கரையில் இருந்தாலும் அக்குள நீர் நன்னீராகும். இத்தகு திருக்குளத்தில் நீராடி- நீறணிகிறார் புலவர். மூலவர் முன் சென்றிருக்கிறார். என்னால் சுவாமியை பார்க்க முடியவில்லை என்றாலும் சுவாமி என்னைப் பார்ப்பாரல்லவா? வேதனையோடு சொல்கிறார் புலவர்.

வழமை போல அவரது வாயில் சொற்கள் விளைந்தன. அவை கவிதையாயின. நான்மணிமாலை பிறந்தது. ஆ ஹ ா . . . மூலஸ்தானத்தில் இந்திர மயிலில் சந்திரப்பிரகாசனாக சுந்தரி வள்ளி- இந்திரன் மகளுடன் கந்தனின் காட்சி புலவருக்கு தெளிவாக தெரிகிறது.

திரும்பிப் பார்க்கிறார் எல்லாம் தெரிகிறது. எல்லாரையும் தெரிகிறது. இப்படி புலவருக்கு கண்ணொளி தந்து அருள் செய்த பிரான். மகப்பேறருளும் மகத்துவன். கல்யாண வேலவனாக- காருண்ய மூர்த்தியாக வடமராட்சி- பொலிகண்டியில் கந்தவனத்தில் காட்சி தருகிறான்.

# 15. அடியார்க்கு அரண்

*அது ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம். மத வெறி பிடித்த அவர்கள் காணும் சைவக் கோயில்களை எல்லாம் இடித்தழித்தார்கள். மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்ததால் மண்டூர் முருகன் கோயில் தப்பித்திருந்தது.*

*ஆனால், ஆவணி விழாப் பறை ஓசை ஒல்லாந்த தளபதியின் காதில் கேட்கவே, பீரங்கி மூலம் இக்கோயிலையும் தகர்க்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*ஒல்லாந்தப் படை கோயிலை இடிக்க வருவதை உணர்ந்தார் பூசாரி கப்புகனார். அவுணர் குலமடங்க பொடியாக்கிய பெருமானிடம் இரந்து வேண்டினார்.*

*“கொத்துப்பறை கொட்டக் களமிசை*
*குக்குக்குகு குக்குக் குகுகுகு*
*குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை*
*கொட்புற்றெழ நட்பற் றவுணரை*
*வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி*
*குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே”*

*என்றல்லவா? அருணகிரிநாதர் பாடுகிறார்.*

*ஒல்லாந்தப் படைக்கு எதிராய் புறப்பட்டது மண்டூர் முருகனின் குளவிப்படை. குளவிகள் மொய்த்துக் குத்த குதிரைகள் விழுந்தன. துப்பாக்கிகள் சரிந்தன. இறந்தவர் போக ஏனைய ஒல்லாந்தப் போர் வீரர்கள் ஓடினர். பிறகு, மண்டூர் பக்கமே அவர்கள் வருவதில்லை. அவர்கள் விட்டு விட்டோடிய துப்பாக்கிகள் இன்றும் பாதுகாக்கப் படுவதாகவும் தகவல். இத்தகு அதிசய கோயில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகிறது.*

*வேடர் வழிபாட்டு மரபுகளும் வேலன் வெறியாட்டு மரபுகளும் நிறைந்த தலமாக- கந்தசுவாமியாரின் காருண்யத்தை வெளிப்படுத்துகிறது மண்டூர்.*

# 16. மாடு பன்றியானது

*நிலவுடமைச் சமூகத்தின் அடிமைகளாகவும் அவர்களுக்குப் பணி செய்யும் குடிகளாகவும் சில சமூகங்கள் இருந்த காலம் அது. இற்றைக்கு நூற்றைம்பதாண்டுகளாவது பழைய காலம்.*

*யாழ்ப்பாணத்து ஊர்களில் அச்சமூகத்தவர்களுக்கு எட்டுக் கல்வி சமூகத்தால் மறுக்கப்பட்டிருந்தது. ஆடை, தோற்றத்திலும் இவர்கள் தம்மை வேறுபடுத்திக் காட்ட வேண்டும் என்று தம்மை உயர் சாதி என நம்பிய சமூகம் விரும்பியது.*

*ஊரின் ஒரு பக்கலில் இச்சமூகம் வாழ்வதற்கான நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. செல்வ வளமுடையவர்களின் உடைகளை துவைப்பதும், அவர்களுக்கு முடி திருத்துவதும், இறைச்சி வெட்டுவதும், சவம் தூக்குவதும், பறை அடிப்பதும், தினக்கூலிக்கு வயலில் வேலை செய்வதும், பனம் கள் இறக்குவதும் இப்படி இன்னோரன்ன வேலைகளையே இச்சமூகத்து ஆண்களும் பெண்களும் செய்ய வேண்டும் என்று உயர் நிலவுடமையாளர்களால் எதிர்பார்க்கப்பட்டது.*

*இத்தகு சமூகம் ஒன்றின் எளிய தொழிலாளி ஒருவன் இறைச்சிக்காக மாட்டை வெட்டி விட்டான். அவனது பார்வையில் மாடு வெட்டுவதும் அதை உண்பதும் கூட தவறில்லைத் தான். இறைச்சியில் உணவுக்குப் பாவிக்க இயலாத மாட்டின் தலையை வடலிக்கூடல் ஒன்றில் புதைத்தான்.*

*ஆனால் அந்த ஊரில் சைவ சமயிகள் நிறைவாக இருந்ததால், மாடு வெட்டுவது ஊர் பெரியவர்களால் தடை செய்யப்பட்டிருந்தது. இவன் வெட்டி பகிர்ந்து தின்று விட்டான். அதை அந்த ஊர் அறிந்து விட்டது. அவனுக்கு கடுமையான தண்டனை விதிக்க தீர்மானிக்கப்பட்டது. அவனோ தான் பன்றியைத் தான் வெட்டியதாக அடம் பிடித்தான்.*

*அடுத்த நாள் ஊர் பெரியவர்கள் முன்றலில் அவன் இறைச்சிக்காக வெட்டிய மாட்டின் தலையை நிலத்துள் புதைத்த*

இடம் தோண்டப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. அ வ னே ா பயந்து போனான். முதலிலேயே ஏதோ கிடைப்பதை உண்டு, கிடைத்ததை உடுத்தி வாழும் குடும்பத்தின் தலைவன் அவன்.

இரவிரவாக அவன் தனக்கு தெரிந்த கடவுளான அன்னை பராசக்தியிடம் முறையிட்டு அழுதான். தன்னை காக்குமாறு கெஞ்சினான். அவன் மட்டுமல்ல, அவனது குடும்பமே ”அம்மா.. தாயே என்னவன் ... என் அப்பன் செய்த பிழையை பொறுத்து எங்களை காத்தருள்” என்று அழுது தொழுதது. மறுநாள் ஊர் கூடியது. பலர் அவன் மாட்டை புதைத்ததை தெளிவாக கண்டிருந்தனர். எனவே ”இந்த ..... நாய்க்கு கடும் தண்டனை வழங்க வேண்டும்” என்று அவர்கள் முடிவு செய்தனர்.

வடலிக்கூடலில் குறித்த நிலம் தோண்டப்பட்டது. அங்கே ஆச்சர்யம் நிகழ்ந்தது. பன்றியின் தலையே கிடைத்தது. ஊருக்கு தான் அவன் பெரியவன், சிறியவன், இன்னான், இனியான். அகில புவன மாதாவான அன்னைக்கு ”அவனும் அவளது குழந்தையே என்ற உண்மையை யாவரும் உணர்ந்தனர்.

இந்த இடம் அதனால் பன்றித்தலைச்சி ஆனது. கண்ணகை அம்மன் இங்கு வந்து தங்கியிருந்ததாக நம்பப்பட்டது. அதனால் இங்கு கண்ணகி வடிவில் அம்பிகை வழிபடப்பட்டாள். யாழ்ப்பாணத்திலுள்ள மட்டுவில் என்ற ஊரில் காணப்படும் இந்த ”பன்றித்தலைச்சி” அம்மன் கோவில் பங்குனித்திங்கள் விழாவுக்குப் பிரபல்யமானது.

பங்குனி மாதத்தில் வருகிற திங்கள் தோறும், இக்கோவிலில் பொங்கலிட்டு வழிபாடாற்றுவதற்காக, ஆயிரக்கணக்கான பக்தர்கள் இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பன்றித்தலைச்சிக்குக் கூடுகின்றார்கள். **1946**க்கு முன் இங்கே மூலஸ்தானத்தில் கும்பம் வைத்து அதன் மேல் வராஹி (பன்றி) முகம் வைத்தே பூசிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்போது அந்த நடைமுறை இல்லை.

வசந்தன் கூத்து முதலிய கிராமிய கூத்துக்கலைகளும் இந்த கோயிலை மையப்படுத்தி ஆடப்பட்டு அன்னை வழிபாடாற்றப்படுகிறாள்.

# 17. அழகால் வந்த விளைவு

*"இவ்வளவு அழகாய் இருக்கிறாயே.."*

*"நீ ஏன் அம்மா எங்களோடு வந்தாய்..."*

*"உன்னை பாத்தா துரைமாரே தூக்கிக்கொண்டு போய் விடுவாங்க.. கவனமாய் இரும்மா..."*

*"நீ வராம விட்டிருக்கலாம்... இந்த வேலைக்கு நாடு கடந்து.. கடல் கடந்து வந்திட்டியே..."*

*இப்படி பெண்கள் பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் எல்லோர் முகத்திலும் அச்சமும் கவலையும் அயர்ச்சியும் குடி கொண்டிருக்கிறது.*

*கி.பி 1830களில் கண்டி - நாவலம்பிட்டிக்கு தோட்டத் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளித் தமிழ்ப் பெண்களே தம்மோடு அங்கிருந்து வந்திருக்கிற அழகான பெண்ணை பார்த்து இப்படி ஏக்கத்தோடு சொல்கிறார்கள்.*

*அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அங்கு மாட்டுக்கொட்டில் போன்ற குடில்கள் தான் அவர்களது இருப்பிடம். காலை முதல் மாலை வரை குளிரிலும் இருளிலும் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும்.*

*கிடைக்கிற சம்பளம் சாப்பாட்டுக்கு கூட காணாது. அவர்களின் எஜமானரான பெரிய கங்காணியின் அட்டகாசங்கள் அதிகம். இந்த நிலையில் அடுத்தடுத்த நாட்களே பெரிய கங்காணியின் கண்களுக்கு அப்பெண் அகப்படுகிறாள்.*

*நீண்ட அழகிய கண்கள், செந்நிற மேனி, சிற்றிடை, கருங்கூந்தல், பெண்மையை வெளிப்படுத்தும் அங்கங்களின் அழகு இவற்றை கண்ட கண்காணி அவளை அடைய துடிக்கிறான்.*

அவன் பெண்கள் விஷயத்தில் எப்போதுமே ஏடாகூடாமானவன். அதை விட இந்த மக்கள் போக்கிடம் அற்றவர்கள். எனவே என்னவும் செய்யலாம் என்ற எண்ணம் வேறு அவனுக்கு துணிவை கொடுக்கும்.

அப்படி அவன் எத்தனையோ பெண்களை அனுபவித்திருக்கிறான். இவளையும் அனுபவிக்க முடிவு செய்கிறான். கெஞ்சியும் கொஞ்சியும் குழைந்தும் அவளை தன் வீட்டுக்கு வரவழைக்க முயல்கிறான். முடியாமற் போகிறது.

நான் தான் உனக்கு எஜமான். நான் சொல்வதை செய்ய தான் வேண்டும் என்று வெருட்டுகிறான்.

இதை பிறர் அறிந்தும் அறியாதவர் போலவே நடக்கிறார்கள். அவர்கள் கையறு நிலை அவர்களே அறிவர். அவர்கள் தம் துயரங்களை முறையிட பொறிமுறையும் இல்லை. அவர்களை ஆங்கில அரசு மனிதர்களாக கருதினால் தானே?

இப்படி ஒரு நாள் அவளை வெருட்டி காரியம் சாதிக்க முடிவு செய்யும் கண்காணி அவளுக்கு கூடையும் கம்பளியும் கூட கொடுக்காமல் தனி மலைக்கு கொழுந்து பறிக்க உத்தரவிடுகிறான்.

"ஏ… நீ பெரிய.. அழகியா? போ…போ.. வேலையைச் செய்" என்று அதட்டுகிறான். அவள் வெடுக்கென மலை ஏறுகிறாள். மாலையில் மற்றவர்கள் ஆறு இறாத்தல் கொடுக்க, அவளோ அறுபது இறாத்தல் கொழுந்து கொடுக்கிறாள்.

நிறுத்து சம்பளமும் வாங்காமல், விரைவாக மீண்டும் மலை உச்சிக்கு ஓடுகிறாள். அவளின் செயலால் அதிர்ந்து போனவர்கள் அவளைத் தேடுகிறார்கள். மலை மேலே ஒரு வேம்பின் நிழலில் இருக்கிறதை காண்கிறார்கள்.

இதற்கிடையில் கங்காணியும் வருகிறான். அவளோ மாரியம்மனாக சிலையாக மாறி விடுகிறாள்.

அச்சம் எங்கும் குடி கொள்கிறது. கங்காணி அழுது தொழுது மன்னிப்பு கேட்கிறான். கோயில் கட்டுவதாக வேண்டுகிறான். இனி பெண்களிடம் இப்படி அத்துமீறி நடக்க மாட்டேன் என்று சத்தியம் செய்கிறான்.

இந்தச் செய்தி ஏனைய தோட்டங்களுக்கும் பரவுகிறது. அந்த தோட்டங்களிலும் கங்காணிமார் பெண்களுடன் பயத்துடன் மரியாதையாக நடக்கப்பழகுகிறார்கள்.

அன்று அழகியாக வந்து அபலைகளின் துன்பம் தீர கோயில் கொண்ட ஆயிரம் கண்ணுடைய ஆத்தாள் மகமாயி இன்றும் நாவல் நகராம் நாவலப்பிட்டியில் குயின்ஸ்பெரி தோட்டத்தில் அழகிய கோயில் கொண்டு அருள்கிறாள்.

# 18. இடர்களுக்கு மத்தியிலும் இறைபணி

*1750 ஆம் ஆண்டளவில் கண்டி அரசசபைக்கு முன்னேஸ்வரம் பகுதியிலிருந்து நம்பிகளான சிவாச்சார்யர்களும் இன்னும் சில சிவநேயச்செல்வர்களும் வருகை தந்திருக்கிறார்கள்.*

*அவர்கள் அனுமதி பெற்று கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கனின் அரசசபைக்கு வருகிறார்கள். சிவாச்சார்யர்களைக் கண்ட மன்னன் எழுந்து வரவேற்கிறான்.*

*வந்த பெரியவர்கள் ராஜாவை வேத மந்திரங்களால் வாழ்த்தி, உபசார வார்த்தைகளைச் சொல்லிப் புகழ்கிறார்கள்.*

*அவர்கள் வந்த காரியத்தை ராஜா வினவுகிறார். முன்னேஸ்வரம் பெரிய கோயில் மஹாத்மியத்தை அவர்கள் உரைக்கிறார்கள்.*

*சங்கபோதி பராக்கிரமபாகு போன்ற பௌத்த சமய ராஜாக்கள் கூட அத்தலத்திற்கு பல திருப்பணிகள் செய்ததை விவரமாகச் சொல்கிறார்கள்.*

*இவற்றை அரச சபையில் இருந்த பிக்குமாரும் இப்போது ஆவலோடு கேட்கத் தொடங்குகிறார்கள்.*

*"சிறப்பாக இந்த ஸ்தலம் வடிவாம்பிகை சமேத முன்னைநாதரான பரமேஸ்வரருடையது. ஆனால் இங்குள்ள மஹாவிஷ்ணு மூர்த்தியும் விசேஷமானவர்.... அவர் தான் ஒன்பதாம் பராக்கிரமபாகு ராஜாவின் நோயை குணப்படுத்தியவர். அப்போது அவர் செய்த தாமிர சாசனமும் இருக்கிறது..."*

*இதோ என்று இப்படி சில சாசனங்களையும் அங்கே காண்பிக்கிறார்கள்.*

"இப்போது இந்த மஹா ஸ்தலம் எங்கள் இராச்சிய எல்லைக்குள் வருகிறதா? தரிசிக்க வருவேன்..." என்கிறார் ராஜா.

அப்போது போர்த்துக்கேயர் இக்கோயிலை தரைமட்டமாக்கிய செய்தியை கண்ணீர் மல்க அவர்கள் சபையில் சொல்கிறார்கள்.

"எங்கள் பௌத்த சைவ வைஷ்ணவ சமயங்களுக்கு அந்நியர் செய்யும் கொடுமை பெரிது... பெரிது..."

மந்த்ரிகளையும் ராஜ பிரதானிகளையும் வணக்கத்திற்குரிய பௌத்ததேரர்களையும் ராஜா நோக்குகிறார். எல்லோரும் மீள இக்கோயிலை உருவாக்குவதே நல்லது என்கிறார்கள்.

ராஜாவின் கட்டளைப்படி தஞ்சையிலிருந்து சிற்பிகள் வரவழைக்கப்பட்டுகின்றார்கள். மீள கோயில் அமைக்கப்படுகிறது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மஹாராஜாவின் முன்னிலையில் கி.பி 1753 ஸ்ரீ முக வருஷம் ஆவணி 14ஆம் நாள் மஹா கும்பாபிஷேகம் நிகழ்கிறது. நூறாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வடிவழகி நாதர் முன்னேச்சுவரமுடையார் மீண்டும் கோயில் கொள்கிறார்.

அப்போதைய அரசின் நெருக்கடி நிலையால் பொன்னேட்டில் பதிக்கப்பட வேண்டிய இந்நிகழ்வில் செப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது.

அப்போது ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் கண்டி அரசு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது. அரசமரபும் சற்றே ஆடிப் போயிருந்தது. இந்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கூட இந்தியாவில் பிறந்தவர் தான்.

என்றாலும் இவ்வளவு நெருக்கடிகளுள்ளும் சுதேச மரபையும் கோயில்கள், விகாரைகளையும் பாதுகாக்க அரசன் எடுத்த முயற்சி தேச பக்தர்களுக்கு மகிழ்வைக் கொடுத்தது.

*இதே அரசன் அடுத்த ஆண்டுகளில் உபசம்பதா சடங்கையும் செய்ததோடு தலதா மாளிகையின் எசல பெரஹறாவையும் சிறப்புறச் செய்ய வழி செய்தான்.*

*முன்னேஸ்வரம் கோயில் அரசர்களின் காலத்திலேயே சிவாச்சார்யர்களின் பரிபாலனத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்போதும் அப்படியே இருக்கிறது.*

*இத்தலத்தில் **1926** முதல் நூறாண்டுகளாக வடிவழகிக்கு மிக மிக விஸ்தாரமான ஶ்ரீ சக்ர பூஜை ஆராதனையும் நிகழ்ந்து வருகிறது.*

*பஞ்ச ஈஸ்வரங்களான ஒன்றான இத்தலம் கொழும்பிலிருந்து வடக்கே **80** கிலோமீற்றர் தூரத்தில் சிலாபத்தில் அமைந்திருக்கிறது.*

# 19. தேரோட்டத்தில் நிகழ்ந்த சம்பவம்

அந்தப் பெரிய கோயிலில் உள்ள இலங்கையிலேயின் பழைமையான தேர்கள் அன்று இழுக்கப்படுகின்றன. இது ஆண்டு தோறும் நடக்கும் நிகழ்ச்சி. ஆயிரக்கணக்கானவர்கள் கூடி மாலை வேளையில் விநாயகருக்கும் சிவபெருமானுக்குமான அத்தேர்களை பக்தியோடு இழுப்பர்.

வழமையாக இயல்பாக தேர்கள் ஓடும். இக்கோயிலில் பெரிய பிள்ளையான பிள்ளையாரின் தேர் சுற்று முடியும் வேளையில் தான் சிவபெருமானின் தேர் புறப்படும்.

அந்த வழக்கப்படி பிள்ளையாரின் திருத்தேர் ஓடுகிறது. தேர் வடம் அறுந்து விட்டது. மீள வடம் பொருந்துகிறார்கள். இழுக்க அறுகிறது. ஒரு முறை அல்ல. நான்கு- முறை நடக்கிறது. தேர் மண்ணில் புதைந்து நிற்கிறது.

வழமையில் தேர் வடம் அறுவதே இல்லை. இம்முறை மாற்ற மாற்ற அறுகிறதே என்று அடியவர்கள் அங்கலாய்க்கிறார்கள். என்ன குற்றம் செய்தோமோ? என்று மன்றாடுகிறார்கள்.

இது புராணக்கதை அல்ல. 03.09.2023 அன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பின் பெரிய கோயில்களில் ஒன்றான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டத்தில் தான் இந்த நிகழ்ச்சி நடக்கிறது.

இக்கோயிலைப் போர்த்துக்கேயர்கள் இடிக்க வருகிற போது அங்கே இருக்கிற சங்கமக் குருக்கள் திருநந்தி தேவருக்கு பூஜை செய்வதை பார்க்கிறார்கள்.

கோபத்தோடும் நகைப்போடும் இந்தக் கல் நந்தி புல் தின்னுமா? என்று கேலி செய்கிறார்கள். உடனே புல் கட்டு வைக்குமாறு போர்த்துக்கேய தளபதி குருக்களுக்கு உத்தரவிடுகிறான்.

*புல் வைக்கப்படுகிறது. நந்தி உறுமிக்கொண்டு எழுகிறது. புல் கட்டைத் தின்று சாணமிடுகிறது. வந்த போர்த்துக்கேயரை ஓட விரட்டுகிறது. இதனால், அந்த மத வெறி ஆட்சியாளர்களின் கொடுமையிலிருந்து இக்கோயில் தப்பிக்கிறது. அதனால் இக்கோயிலில் இருந்த தேர்களும் அழிவிலிருந்து தப்பிக்கின்றன.*

*இலங்கையிலிருந்த கோயில்கள், கோயில் ஆபரணங்கள், தேர்கள் யாவும் போர்த்துக்கேய மத வெறியாளர்களால் அழிக்கப்பட்டு விட இக்கோயில் தேர்கள் மட்டும் அழிவிலிருந்து தப்புகின்றன.*

*தர்மசிங்க மன்னன் என்பவனால் உருவாக்கப்பட்ட இத்தேர்கள் தான் இன்றும் ஓடுகின்றன. அதில் ஒன்று தான் இந்த 2023 தேர் ஓட்டத்தில் ஓட மறுக்கிறது. இக்கோயிலுக்கு பல மரபுகள் உண்டு. இக்கோயில் வீர சைவ சங்கம குருமாரால் பூசிக்கப்படுவது. அம்மரபு கூட தாய் வழியில் வருமாம். கொடிமரம் அறுபது அடி உயரமானது.*

*இப்படியான புதுமையான இக்கோயிற் தேர் ஓட்டத்தில் நடந்த அசம்பாவிதத்தால் எல்லோரும் ஆடிப்போகிறார்கள்.*

*அந்த ஆண்டு கொடியேற்றிய குருக்கள் தேரிலிருந்து இறங்கி மூலஸ்தானம் போய் தேங்காய் உடைத்து, அழுது தொழுகிறார்.*

*மீண்டும் வடம் தேரில் இணைக்கப்படுகிறது. வானத்தில் வித்தியாசமாக ஒரு ஒளி பிறக்கிறது. அதன் கதிர்கள் மூலஸ்தான விமானத்திலும் தேரிலும் பட்டுத் தெறிக்கிறது. எல்லோரும் அழுது தொழ தேர் அசைகிறது. விரைவாக ஓடி நிலையைச் சேருகிறது. அடுத்த தேரும் இயல்பாக ஓடுகிறது.*

*இந்த தான்தோன்றியப்பரின் இருப்பை அவர் எப்போதும் உணர்த்துகிறார்.*

*போர்த்துக்கேயப்படையையே ஓட விரட்டிய அவரது வெள் விடையான நந்தி இன்றும் இக்கோயிலின் மகா மண்டபத்தில் காட்சி தருகிறது.*

# 20. போரும் தேரும் சீரும்

*1983 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் ஒரு அனுஷ நட்சத்திர நாள். பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயிலில் பதினைந்து வருடங்களாக நடைபெற்று சித்திரத்தேர்த் திருப்பணி நிறைவு பெறும் நிலையில் இருக்கிறது.*

*அனுஷ நட்சத்திரத்தின் அதிதேவதை மஹாலக்ஷ்மி ஆதலில் ஒவ்வொரு அனுஷத்திற்கும் பொன்னாலையின் மகாராணியான பெருந்தேவித்தாயாருக்கு திருமஞ்சனம் நடக்கும்.*

*அன்று அது முடிந்ததும் குருக்கள்மார், அறங்காவலர்கள், அடியார்கள் எல்லோரும் கூடியிருந்து பூரணத்துவம் பெற்றுக்கொண்டிருக்கிற திருத்தேரின் முன் மகிழ்ச்சியுடன் உரையாடுகிறார்கள்.*

*தமிழக சிற்பாசாரியார்களும் அதில் இணைந்து கொள்கிறார்கள்.*

*“.... ச்ராவண்யாம் க்ருஷ்ணபக்ஷேது சாஸ்டம்யாம் ச விசேஷத:*
*ரோஜந்மமத்யேது ஸ்வர்ணாகார நிவாஸிநம்*
*பச்யேச பக்தியுக்தஸ்ஸ அச்யுதம் லோக ரக்ஷகம்*
*தஸ்ய பாபாநிநஸ்யந்தி வஹ்நிநாதூலராசிவத்*
*புத்ரபௌத்ராதிபிர்யுக்தோ தீர்க்கமாயுஷ்யந்து யச்சதி*
*இஹைவ ஸகலாந்போகாந் புக்த்வா விஷ்ணோ: க்ருபாத்ருஷா*
*அந்தே வைகுண்ட மாஸாது*
*விஷ்ணுநா ஸஹ மோததே..”*

*என்றிருக்கிறது.*

*ஆவணி மாதம் கிருஷ்ண பக்ஷத்தில் வரும் அட்டமியாகிய சிறப்பான நல்ல நாளில் எவர் பொன்னாலைப்பதியில் எழுந்தருளியுள்ள வரதராஜரான - லோக ரக்ஷகர்- ஆகிய அச்சுதரான பெருமாளை இப்பிறவியில் அன்புஃ பக்தியுடன் தரிசிக்கிறானோ அவனது பாவங்கள் தீயிலிட்ட பஞ்சு மூட்டை போல அழிந்து விடும்.*

*அவன் புத்ர பௌத்திரர்களோடு எல்லாவித இன்பங்களையும் இவ்வுலக வாழ்வில் பெற்று முடிவில் வைகுண்டத்தை அடைந்து, அங்கே இன்பமே உருவான ஸ்ரீமந் நாராயணனோடு களிப்புற்று வாழ்வான் என்பது அதன் பொருள்" என்கிறார் குருக்கள்.*

*"இந்த ஆண்டு இதே நாளில் பெருமாள் புதிய தேரில் உலா வர இருக்கிறார் அல்லவா?" என்கிறார் அறங்காவலர்.*

*"நீங்கள் சொன்னபடி இக்கோயிலின் தல வரலாறான கூர்மாவதாரமாக - ஆமையாக பெருமாள் கடலில் தோன்றியது. மீனவன் ஒருவன் அதை பிடிக்க முயன்றது. புண்ணிய கோடி விமானம் தோன்றியது. இந்திரன் வழிபட்டது.... இவைகள் எல்லாம் தேரில் சிற்பங்களாக செதுக்கப்பட்ட இருக்கிறது.. எல்லோரும் அதை பார்த்து ஏனையோருக்கும் காண்பிக்க வேண்டும்..."*

*இது தலைமை சிற்பியின் கருத்து..*

*"ஒரு காலத்தில் இத்தலம் ஏழு வீதிகளோடு விளங்கியது. ஏழாம் வீதிக் கோபுர வாயிலில் இருந்த பிள்ளையார் இப்போதும் அங்கே இருக்கிறார். போர்த்துக்கேயர் இக்கோயிலை இடித்தே ஊர்காவற்றுறைக் கோட்டை கட்டினர்.." என்கிறார் ஒரு அன்பர்.*

*".... அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார். ஆனை பரி தேரின் மேல் அழகர் வந்தார்.. கச்சி தனில் கண் கொடுக்கும் திருமால் வந்தார்..." என்று ஒருவர் பாடிக் கொண்டு வருகிறார்.*

*அதைக் கேட்ட இன்னொருவரும் ஏதோ பாடத் தொடங்குகிறார். அங்கே பஜனை சம்பிரதாயம் பல தசாப்தங்களாக நிலவுவதால் பலருக்கும் பெருமாளை பாடுவதில் ஒரு ஈர்ப்பு இருக்கிறது..*

*"பொறுங்கள் முதலில் நாம் கதைப்பதை குழப்ப வேண்டாம்.. இப்படி நல்ல விஷயங்களை யார் சொல்லுவார்..?" என்று சொல்லி பாடுவதை மற்றொருவர் நிறுத்துகிறார்.*

“அது சரி ஐயா, இந்த புளிய மரத்தின் கீழ் இருப்பது முனியப்பரா?” என்று புதியவர் கேட்க எல்லோரும் சிரித்து விட்டு சிரித்ததற்கு மன்னிப்பு கேட்டு விட்டு ”நம்மாழ்வார்” பற்றி அவருக்கு விளக்குகிறார்கள். இப்படிப் போன கதை மெதுவாக வேறு திசை நோக்கி பயணிக்கத் தொடங்குகிறது. புதியவர்கள் சிலர் வர பழையவர்கள் விலகுகிறார்கள்.

“இப்ப நடக்கிற சம்பவங்களைப் பார்க்கிற போது இந்த நாட்டில் நாங்கள் வாழ முடியாது போல இருக்கு.. இப்படி செஞ்சிட்டாங்களே…”

“ஒருவரும் போற பாதை நல்லா தெரியல.. அடிக்கு அடி எண்டு மாறி மாறி அடிச்சா எங்க போகுமோ…?”

“கொலைகளும் கொள்ளைகளும் நினைச்சா மனசு கலங்கிப் போகுது.. என்ர நண்பர் ஒருவரும் எல்லாம் இழந்து வந்திருக்கிறார்..”

இப்படிக் கதை நகரத்தொடங்கியது.

“இந்திய தத்துவவியல் மதங்களான சைவ- வைஷ்ணவ - பௌத்த - சமண மதங்களிடையே நிறைய ஒற்றுமை உண்டு. இந்தப்பக்கத்தாலேனும் நாம் ஒற்றுமைப்பட்டு நிற்க வேண்டும்..”

“அங்கே தமிழகத்தில் சைவ- வைஷ்ணவ பேதம் இன்னும் கொஞ்சம் இருக்கு. இங்க இருக்கோ? இங்கு குருக்கள்மார் சிவபூஜை பண்ணி விட்டு பெருமாளுக்கு பூஜை பண்ணுவினம்.. அடியார்களும் கோவிந்தா எண்டும் அரோஹரா எண்டும் சொல்லி வழிபடுவினம்… நாராயணா எண்டு சொல்லி விபூதியும் பூசுவம்….”

அது மாதிரி பௌத்த அரச சபைகளில் பிராமணர்கள் கூட மந்திரிகளாக இருந்திச்சினம். பராக்கிரமபாகு, புவனேகபாகு போன்ற பௌத்த அரசர்கள் பல இந்துக்கோயில்களை கட்டியிருக்கினம்..”

*“அதெல்லாம் சரி. இங்கு நடப்பது மதப்பிரச்சினை இல்ல. இது மொழிப்பிரச்சினை அல்லவா?”*

*“... நாங்கள் இதை பற்றி கதைச்சு என்ன ஆகப்போகுது? கூடிக்கதைக்கிறத எங்கட பொடிகளும் விரும்ப மாட்டாங்கள்.. அவனவன் தான் செய்யுறது நினைக்குறது தான் சரி என்பான்.....”*

*“அது சரி. எப்ப தேர் வெள்ளோட்டம்?” ஒருவர் கதையை மாற்ற விரும்புகிறார்.*

*ஈழத்தின் தனித்துவமான தேர்களில் முதன்மையானதும் குச்ச வேலைகளோடும் செதுக்கல், சிற்பங்களோடும் கூடிய இந்த பொன்னாலை வரதனின் திருத்தேர் மாயவரம் ஏகாம்பரம் ஸ்தபதி தலைமையான குழு உருவாக்கியது.*

***1983** ஆம் ஆண்டு ஆவணி ரோகிணி நாளில் இத்தேரில் முதன்முதலாகப் பெருமாள் உலா வந்தார்.*

*இன்னல்கள், இடப்பெயர்வுகள், போர் எல்லாவற்றையும் கடந்து இப்போதும் காத்தற் கடவுள் கீதை சொன்ன கண்ணன் அந்த வண்ண தேரில் வருகிறான். கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு தருகிறான்.*

# 21. கடல் நகரில் ஒரு அழகி

*"தினத்தந்தனா... தினத்தந்தனா..."*

*நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஊர்காவற்துறையில் தரப்பில் இராஜசூரிய முதலியார் என்பவருக்கு நிறைய நில புலம் வயல் சொத்துக்கள் இருந்தன. எனவே அவருக்கு நிறைய வேலையாட்களும் இருந்தனர்.*

*அந்த வேலையாட்களில் ஒருவர் எழுத்து வாசனை இல்லாத அராலி முத்தர். அவருக்கு எழுத வாசிக்க தெரியாதது மட்டுமல்ல பாடவும் தெரியாது. வாயால் சொற்கட்டுக்களைச் சொல்லவும் வராது.*

*ஆனால் கடுமையாக வேலை செய்வார். இதனால் முதலியாரின் அன்பையும் ஏனைய தொழிலாளர்களின் பொறாமையையும் ஒருங்கே பெற்றார்.*

*முதலியாரின் வயலில் எல்லோரும் "தினதந்தனா... திந் நந்தனா... தைய தந்தனா.." என்று பாடிப்பாடி அருவி வெட்ட இவரோ பாட்டின் வேகத்தினும் பன்மடங்காக அருவி வெட்டுவார். இதனால் முதலியாரின் பாராட்டைப் பெற்றார்.*

*இதனை பார்த்த வேலையாட்கள் இனி எல்லோரும் வரிசையாக பாடவும் வேண்டும் என்று வகுத்துக் கொண்டனர். ஒரு பௌர்ணமியில் முத்தர் பாட வேண்டியிருந்தது.*

*இவருக்கு வாயில் தினத்தந்தனா என்ற சொல்லு கூட வரவில்லை. எல்லோரும் கலீர் என்று சிரித்தனர். அடித்து அவமானப்படுத்தி விட்டுச் சென்றனர்.*

*எல்லோரும் போக, முத்தர் சொல்லொணாத துயரத்தோடு கரம்பன் என்ற அந்த ஊரிலுள்ள வயல் வரம்பில் நின்று பார்க்க நயினாதீவு நாகபூஷணியம்பாளின் கோயில் தெரிந்தது.*

*தகப்பன், தாயில்லாத எனக்கு ஆதரவு தா.. தாயே என்று அழுது கொண்டே வரம்பில் மயங்கிப் போனார்.*

*அன்று இரவு பூரணை வேளை முத்தர் முன் நாகபூஷணி அம்பாள் தோன்றி திருவடிகளை அவர் தலை வைத்தார். நெல் நுனியால் அவர் நாக்கில் எழுதினாள்.*

*"சந்த்ர பூரண ரத்ன தங்க கோடக்கிரிட தண்ணின்ற தவழ வட்ட.." என்று தொடங்கி பத்து விருத்தப்பாக்களைப் பாடினார். இது நாகபூஷணியம்மை பதிகம் என்று அழைக்கப்படுகிறது.*

*பிறப்பு, கல்வி, தொழில் அனைத்திலும் தாழ்ந்திருந்தவராக கருதப்பட்ட முத்தர் அதன் பின் அராலி முத்துக்குமாருப் புலவர் என்று அழைக்கப்பட்டார்.*

*இந்த புலவர் இவ்வாறு பாடிய கோயில் அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றான நயினை நாகபூஷணி அம்பாள் கோயில்.*

*சிலப்பதிகாரச் செல்வியான கண்ணகையின் தந்தை மாநாய்கனும் கோவலனின் தந்தையான மாசாத்துவனும் பூசித்து திருப்பணிகள் செய்து கோயில் இது. அவர்கள் வணிகர்களாதலில் கடற்பயணம் அவர்கள் வாழ்வோடு இணைந்து இருந்தது.*

*மாநாய்கனின் நான்காம் சந்ததியைச் சேர்ந்த வீராசாமிச்செட்டியார் (இவர் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவர் ஆகலாம் ) மதுரையிலிருந்து இராமசந்திரப்பட்டர் நயினா பட்டர் என்ற அந்தணரை அழைத்து வந்து குடியேற்றியதால் நாகதீவு என்ற இத்தீவு அப்பட்டரின் சிறப்பில் நயினாதீவு ஆயிற்று.*

*"காலம் என்பது கறங்கு போற் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய் மாறிடும் தோற்றம்" என்கிறது மனோன்மணியம் நூல்.*

கோயில் சிறப்புற்று இருந்தது. தீவில் பெரும்பாலானோம் பிராமணர் என்பதால் தீவும் பிராமணத்தீவு எனப்பட்டது. போர்த்துக்கேயர் வந்தனர். கோயிலை உடைத்தனர். ஆலம்பொந்தில் அம்பாளை மறைத்து வைத்து வழிபட்டனர்.

1788இல் மீள கோயில் எழுந்தது. 1792இல் ஒல்லாந்தர் மீண்டும் இடிக்க வந்தனர். அப்போதைய முதலாளி இராமச்சந்திரன் தான் கிறிஸ்தவர் என்று சொல்லி பைபிள் வாசித்தார். அதனால் கோயில் தப்பியது.

இன்று இக்கோயில் நிமிர்ந்து நிற்கிறது.

அங்கே அன்னை நாக தோஷம் நீக்கி, மங்கல வாழ்வும் மகப்பேறும் மகிழ்வுறு நலமும் வளமும் தந்தருள்கிறாள். ஐந்து தலை அரவின் கீழ் இருந்தவள் இப்போது தானே வளர்ந்து ஏழு தலை காட்டும் நாகக் குடையில் நம்மை பேணுகிறாள்.

சமுத்ர நகர ஸுந்தரீம்
ஸதா நாக பூஷணீம்
அமர பீட வாசினீம்
அன்ன பூர்ணாம்பிகாம்
கமல நயன சந்த்ரிகாம்
கைலாஸேச காமிநீம்
நமாமிதாம் ஸுக ப்ரதாம்
நாக ராஜ ஈஸ்வரீம்

# 22. பேழைக்குள் வந்த பொக்கிஷம்

*நானூறு வருஷங்களுக்கு முன் அனலைதீவுக்கடற்கரை பரபரப்பாக இருக்கிறது.*

*மீன் பிடி வள்ளங்கள் நிலத்தை நோக்கி வரும் அந்த அதிகாலை வேளையில் கடலில் படும் மீன்களை அள்ளி வியாபாரம் செய்யவும் அவற்றை வாங்கவும் என்று கடற்கரையில் மக்கள் குழுமியிருக்கிறார்கள்.*

*ஆனால் வித்தியாசமான ஒரு பேழை கடலன்னையால் கொண்டு வரப்பட்டு அனலை மண்ணில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.*

*அந்தப் பேழைக்குள் என்ன இருக்கிறது? என்று அறிய எல்லோரும்*

*ஆசை கொள்கிறார்கள். ஆனால், ஒரு வித அச்சமும் எல்லோர் மனதிலும் குடி கொள்கிறது.*

*இருப்பினும் அதில் துணிந்த ஒரு சிலர் பேழையை திறக்கிறார்கள். பேழைக்குள் ஒரே கல்லில் உருவான பூரணை - புஷ்கலை உடனாய ஐயனாரின் வடிவத்தைக் காண்கிறார்கள்.*

*தண்டாமரை முகமும் மலர்க்கண்களும் தன் கரத்தே*
*செண்டாயுதமும் தரித்து எமையாளும் சிவக்கொழுந்தைக்*
*கண்டேன் இரண்டு கரங்கூப்பினேன் வினைக் கட்டறுத்துக்*
*கொண்டேன் அழியாப் பெருவாழ்வு தான்வந்து கூடியதே*

*என்று வியக்கிறார்கள்.*

*தங்கள் குல தெய்வம் எங்களைத் தேடி வந்தது. என்று மயிர்கூச்செறிய ஆடிப்பாடுகிறார்கள்.*

ஊருக்குள் செய்தி பரவுகிறது. பெரியவர்கள் பலரும் விரைந்து வருகிறார்கள். அரோஹரா கோஷம் ஒலிக்கிறது. மத்தளம் முழங்குகிறது. சங்கொலி பிறக்கிறது.

அப்படியே பேழையை ஊருக்குள் கொண்டு வருகிறார்கள். கூழாமரத்தடியில் வைத்த பிறகு மீளவும் எடுக்க முடியவில்லை. இறைவன் சித்தம் அது என்று அங்கேயே அந்த ஐயனாருக்குக் கோயில் எழுப்புகிறார்கள்.

சில பல வருடங்கள் கழிகிறது. ஒரு நாள் கடல் எழுகிறது. சுனாமி வருகிறது. ஒரு பனை உயரத்திற்கு அது எழுவதைக் கண்டு அச்சிறு தீவு மக்கள் அலறிக் துடிக்கிறார்கள்.

எல்லோரும் ஐயனார் கோயிலுக்குள் போய் சரணடைகிறார்கள்.

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம், விண்ணோர் ஆதியே ஓலம், செண்டார்
கையனே ஓலம், எங்கள் கடவுளே ஓலம், மெய்யர்
மெய்யனே ஓலம், தொல்சீர் வீரனே ஓலம், ஓலம்!

என்று அலறுகிறார்கள். பெரிய வெடியோசை கேட்கிறது.

ஐயனாரின் அருளால் கடல் அடங்கியது. ஊர் பழைய நிலை பெற்றது.

# 23. கோணநாதரின் கோயில்களின் கதை

*கி.பி **1624**ஆம் ஆண்டு போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் கிழக்கிலங்கையின் பெருங் கோயிலான திருக்கோணேஸ்வரத்தை முற்றாக இடித்தழிக்கிறார்கள்.*

*திருஞானசம்பந்தர் பாடிய சிவாலயம், சக்தி பீடங்களில் முதன்மையான ஒன்றான சாங்கரீபீடம், பழைமையான விஷ்ணு ஆலயம், ஆயிரம் கால் மண்டபம், எல்லாம் முற்றாக இடிக்கப்படுகிறது.*

*ஆட்சியாளர்களின் மத வெறியும் ஆணவமும் எம் மண்ணின் பெரும் மரபுரிமை அடையாளத்தை அழித்தொழிக்கிறது.*

*சிவபெருமான்- அம்பாள்- விஷ்ணு ஆகிய சனாதன தர்மத்தின் திரி ரத்னங்களும் பிரகாசித்த திருகோணமலை அந்நியர் வசப்பட்டுப் போகிறது.*

*அருணகிரிநாதர் பாடிய அப்பெரும் கோயில் இடிக்கப்பட்டு அக்கோயில் கற்களைக் கொண்டே பாதகர்களான அந்த போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் அங்கேயே ஒரு கோட்டை கட்டுகிறார்கள்.*

*சைவ சமயிகள் அலறிக் துடிக்கிறார்கள். தமிழார்வலர்கள் வேதனைப்படுகிறார்கள். இத்தகு சைவர்களை கண்டாலே போர்த்துக்கேயப்படை கொலை செய்கிறது.*

*ஆனாலும் பழைய கோயிலின் எச்சங்கள், சிலைகள் ஏதும் கிடைத்தால் மிக இரகசியமாக அதை எடுத்துக் கொண்டு கண்டிய இராச்சிய கட்டுப்பாட்டு கிராமங்களுக்குள் சைவர்கள் ஓடுகிறார்கள்.*

அப்படி ஓடியவர்கள் இனி (இப்போதைக்கு) கோண மலையில் பறங்கியர் கோட்டை கட்டி விட்டதால் கோயில் கட்ட வாய்ப்பில்லை என்று அழுது புலம்புகிறார்கள்.

இத்தகு வேதனை கண்டியை ஆண்ட அரசனுக்கும் கூட இருக்கிறது. அவன் கனவில் பிடியன்ன மென்னடையாளுடன் கோணநாதர் தோன்றி தனக்கு தம்பலகாமத்தில் கோயில் அமைக்குமாறு கட்டளையிடுகிறார்.

செந்நெல் வயல் சூழ்ந்த அந்த தம்பலகாமத்தில் ஆதி கோண நாதர் கோயில் எழுகிறது. பழைய கோணேச்சரத்துக் கோயிலின் சில திருவுருவங்களும் அங்கு ஸ்தாபிக்கப்படுகிறது. முக்கியமாக நடனபாதத்திருவடிவம் அங்கு சிவபெருமானாகவே எழுந்தருளப் பண்ணப்படுகிறது.

வழி வழியாக திருகோணமலை இறைவனுக்கு தொண்டு செய்த அடியார்கள் தம் கொழும்பை இங்கு செய்யத் தொடங்குகிறார்கள்.

மிகவும் பிற்காலத்தில் மீண்டும் கோண மலையில் சிறிய கோயில் கட்டப்பட்டாலும் பழைமையின் சான்றாகவும் இடையில் நடந்த துயரங்களைக் கடந்து சைவ சமயிகள் செலுத்திய தூய பக்தியின் வடிவமாகவும் இன்றும் திருகோணமலை பகுதியிலுள்ள தம்பலகாமம் ஹம்ஸ கமனாம்பாள் சமேத ஆதி கோணநாதரின் அழகிய பெருங்கோயில் காட்சி தருகிறது.

இன்றும் அங்கே இருக்கும் நீண்ட மரபுகளும் வழி வழி அடியார்களின் திருத்தொண்டும் எம்மை ஆச்சர்யப்படுத்துகிறது.

# 24. ஆங்கிலேயரும் இந்துக் கோயில் அமைத்தார்கள்...!

“போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் எங்கள் இந்துக்கோயில்களை இடித்ததாக கேள்விப்பட்டிருக்கிறோம். ஆங்கிலேயர் ஒருவர் கோயில் ஒன்றை கட்டியதாக கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ”என்ற பீடிகையோடு பேச்சை தொடங்கினாள் தரம் எட்டில் கல்வி கற்கும் லக்சனா என்ற மாணவி.

“அந்தக்கோயில் கொழும்பு ஹங்வெல்ல அம்மன் கோயில். அந்த இடம் இருநூறு வருடம் முன்னர் இறப்பர் தோட்ட மாக இருந்தது. தமிழ்நாட்டு மக்கள் அங்கே தொழிலுக்காக வந்து குடியேறியிருந்தனர்..”

“அப்ப அவங்க தான் கோயில் கட்டியிருப்பாங்க..” சொன்னான் விஜய்.

“அது தான் இல்லை. அந்த தோட்டத்தின் முதலாளியாக இருந்தவர் இங்கிலாந்து நாட்டவரான சேர். ஹோரடன் புரூக். அவர் ஒரு நாள் தோட்டத்தை சுற்றிப் பார்க்கும் போது மிக வடிவான - வித்தியாசமான ஒரு பெண்ணை கண்டார். கண்டவர் கண் முன்னே அப்பெண் மறைந்து போனா...”

“மாணவர்கள் வியந்து கேட்க லக்சனா தொடர்ந்தாள். ”.... அங்கிருப்பவர்களிடம் அந்த ஆங்கிலேயர் விசாரிக்க, ஓ... அதுவா அது எங்க ஆத்தா.. மகமாயி..” என்று சொல்லியிருக்கிறார்கள்.

வியந்து போன அந்த முதலாளி மதுரை மீனாட்சியம்மன் கோயில் சாயலில் பெரிய கோயில் ஒன்றை 1875இல் கட்டி அர்ப்பணித்திருக்கிறார்.

“இப்பவும் அந்த கோயில் இருக்கா..?” கேட்டாள் கவிநயா.

“... அந்த தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஊருக்கு போன பிறகு கோயில் பாழடைஞ்சு போச்சாம். இப்ப தான் மீண்டும் திருத்தியிருக்கினமாம்... அப்பா ஒருநாளைக்கு போய் கும்பிடுவம் எண்டு சொன்னவர்...”

அடுத்து உற்சாகமாக எழுந்தான் ஸ்கந்தன்.

“பஞ்ச ஈஸ்வரங்களுக்கு நிகராக கொழும்பில் நிமிர்ந்து நிற்கும் கற்றளிக்கோயில் பொன்னம்பலவாணேஸ்வரம். சோழப்பேரரசர்களின் திருப்பணிக்கு நிகராக 1907இல் இக்கோயிலை அமைத்தவர் சேர். பொன் இராமநாத வள்ளல். ஆறுகால பூசை, ஆகம விதி மாறாத கட்டடவியல், அற்புதமான திருவிழாக்கள் எல்லாம் பார்க்க பொன்னம்பலவாணேஸ்வரம் வர வேண்டும்....”

இப்படி அடுக்கடுக்கான தலைநகரின் பெரிய கோயிலான பொன்னம்பலவாணேஸ்வரத்தை ஸ்கந்தன் வர்ணித்தான்.

காருண்யா எழுந்தாள் ”மயூரபதி பத்ரகாளியம்பாள் ஆலயம் புதிய பெரிய கோயில் என்றே நினைப்பர். ஆனால் இக்கோயிலின் வழிபாட்டு ஆரம்பம் நூறாண்டு பழையது. முதலில் விஷ்ணு வழிபாட்டில் தொடங்கி அது மாயோனின் தங்கையான அம்மாள் வழிபாட்டில் சேர்ந்திருக்கிறது.

“இப்போது இக்கோயில் இலங்கையின் தனிப்பெரும் அடையாளங்களுள் ஒன்றாகியிருக்கிறது..”

அடுத்து கர்ஷணா நீங்க சொல்லுங்கோ என்றார் ஆசிரியை.

“மிஸ், நான் இரத்மலானை சிவன் கோயிலுக்கு போனனான். அம்மா சொன்னவா இந்தக்கோயில் மிகப்பழையதாம். அப்படி பழைய கோயிலை 1519இல்

*போர்த்துக்கேயர் முழுக்க இடிச்சு போட்டினமாம். இலங்கையில் அவர்கள் முதல்ல அழிச்ச கோயில் இது தானாம். போதாதுக்கு கோயில் குருக்களா இருந்த குப்புசாமிக்குருக்களை குடும்பத்தோட கொலை செஞ்சிட்டினமாம்... அந்த குருக்களின் ஒரு மகனை மட்டும் தங்கட சமயத்துக்கு மாத்தி இலங்கையிண்ட முதல் பாதிரியார் ஆக்கிச்சினமாம்...."*

*இப்படி கர்ஷணா சொல்ல அங்கே ஒரு இறுக்கம் நிலவியது. உடனே ஆசிரியை*

*"போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் வேற. இப்ப வேற... அங்கே அவர்களது நாட்டிலயே இப்ப எங்க ஆட்கள் கோயில் கட்டி தேர் இழுக்கினம்..."*

*என்று சொல்லி இப்ப இருக்கிற கிறிஸ்தவர்கள் எம் தேசத்தவர்கள் அல்லவா? எனவே நீங்கள் பாடசாலையில் மத வேறுபாடு இல்லாமல் பிரண்ஸ் ஆக இருக்க வேண்டும் என்று சொன்னார்.*

*"அப்படி தான் அம்மாவும் சொன்னவா..." என்றாள் கர்ஷணா..*

*"1750இல் அமைக்கப்பட்ட கோயில் கப்பித்தாவத்தை செல்வ விநாயகர் கோயில். அதற்கு பக்கத்தில் சிவன் கோயிலும் இருக்கு.."*

*"ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமண்ய சுவாமி கோயிலும் முந்நூறு வருஷம் பழையதாம்..."*

*"ஜிந்துப்பிட்டி சிவராஜ விநாயகர் கோயில் 1813இல் அமைக்கப்பட்டதாம்.. அந்த கோயில் சத்திரத்தில சுவாமி விவேகானந்தர் கூட வந்து தங்கினவராம்..."*

*இப்படி பல பிள்ளைகள் பல செய்திகள் சொன்னார்கள்.*

*2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம். இலங்கைத் தலைநகர் கொழும்பில் உள்ள ஒரு அறநெறிப் பாடசாலை.*

*கடந்த சில ஆண்டுகளாக அருகிலுள்ள பெரிய கோயிலின் அனுசரணையில் ஞாயிறு தோறும் இப்பாடசாலை சிறப்புற இயங்கி வருகிறது.*

*இந்த வாரம் கொழும்பையும் கொழும்பைச் சுற்றியுமுள்ள பழைமையான ஆலயங்கள் என்ற தலைப்பில் பற்றி பேச தயாராகி வருமாறு சென்ற வாரம் மாணவர்களுக்கு ஆசிரியரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.*

*அன்று சிறப்பு அதிதியாக கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவி வந்திருந்தார்.*

*அவர் பேசிய மாணவர்கள் ஒவ்வொருவரையும் பாராட்டிப் பேசி ஆசீர்வதித்தார். சில அறிவுரைகளையும் கூறினார்.*

*மாணவர்களுக்கு புத்தகப்பரிசில்கள் வழங்கப்பட்டன.*

# 25. கண்டம் கடந்து பயணிக்கும் ஈழத்துக் கோயில்கள்

*கனடாவில் விநாயகர் ஆலயத்தோடு இணைந்த இந்துக்கல்லூரி நடாத்தும் 2025ஆம் ஆண்டுக்கான சிவத்தமிழ் விழாவில் கலந்து கொண்டிருந்த நண்பர்கள் சிலர் கூடியிருந்து பலவும் பத்தும் உரையாடிக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.*

*அப்போது அப்படி கூடியிருந்து மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்த பத்து பேரில் இருவர் சிற்றுண்டியை நன்றி சொல்லி எடுக்காமல் விட்டார்கள்.*

*“வித்யா அக்கா என்ன டையேட்டோ?” பக்கத்திலிருந்த ஜனனி கேட்டாள்.*

*“இல்ல ஜனனி வற்றாப்பளைப் பொங்கல் எண்டதால இண்டைக்கு நான் விரதம்...”*

*“வினோ, உமக்கு எங்க திருவிழா?” கார்த்திக் கேட்டான்.*

*“எனக்கும் எங்கட உசன் கந்தசுவாமி கோயில்ல திருவிழா நடக்குது”*

*“கனடாவுக்கு வந்து முப்பது வருஷமானாலும் உங்கட ஊர் கோயில் திருவிழாவை மறக்க மாட்டீங்களே...”*

*“அது எப்படி? எங்கட அக்கா ஒராள் முப்பத்தைஞ்சு வருஷமா இலண்டனில இருக்கிறா. அவாக்கு வவுனியா கந்தசுவாமி கோயில் திருவிழா எண்டா போதும்....”*

*இப்படி சொன்னாள் சௌமினி.*

*“நாங்கள் இடம்பெயர்ந்து வவுனியாவில இருக்கேக்க கந்தசுவாமி கோயில்ல ஒரு கந்தசஷ்டி விரதம் இருந்தனான். அந்த கோயில உமக்கு ஏதும் தெரியுமே...” இன்னொருவர் கேட்டார்.*

*“அது ஒரு பழைய கோயில். 1890இல் ஒரு சந்நியாசியாரால் திருச்செந்தூரிலிருந்து வேல் கொண்டு வந்து தொடங்கிய கோயில் எண்டு எங்கயோ வாசிச்சனான். அப்படி பார்த்தா நூற்றுமுப்பத்தைஞ்சு வருஷம் பழைய கோயில். இப்பவும் கந்தசஷ்டி சூரன் போருக்கெல்லாம் ஆயிரக்கணக்கில அடியார்கள் வந்து வழிபடுவினம்...”*

*“அனுராதபுரம், பொலனறுவையில கூட பழைமையான முருகன் கோயில்கள் இருந்தது. பொலனறுவையில தம்பன்கடவை என்ற இடத்தில முந்நூறு வருஷம் பழைய கண்டிய இராசதானிக்காலத்து சித்திர வேலாயுத சுவாமி கோயில் ஒண்டு இருந்தது.... கொஞ்சக்காலம் அனுராதபுரத்தில் ரீச் பண்ணேக்க நான் போய் பார்த்திருக்கேன்...” வேலாயுதபிள்ளை மாஸ்ரர் சொன்னார். அவருக்கு எண்பது வயசு இருக்கும்.*

*அவருடைய மகள் குறுக்கிட்டாள் ”அப்பா நானும் பார்த்திருக்கன். என்ர பேஸ்புக்கில பிரவீண் எண்டு ஒரு தம்பி இருக்கிறார். அவர் அந்தக்கோயில் படங்கள் நிறைய போடுவார். இப்பவும் அந்தக்கோயில் நல்லா இருக்கு...”*

*“அப்படியே பிள்ள... நான் நினைச்சேன் இனக்கலவரத்தில கோயிலை முழுக்க இடிச்சிருப்பாங்கள் எண்டு.... நீ சொல்லுறதக் கேட்க நிம்மதியா இருக்கு... வீட்ட போனதும் என்ர போனுக்கு ஒருக்கா அந்த படங்கள அனுப்பி விடு...”*

*“நீங்கள் எல்லாம் கதைக்கிறதால கேக்கிறன்... அவுஸ்ரேலியாவில இருக்கிற என்ர கசின் கேட்டவா நல்லூர் கந்தசுவாமி கோயில் ஊஞ்சல் இருக்கோ எண்டு... உங்களிட்ட யாரிட்டயாவது இருக்கே...”*

*சாஸ்வதா கேட்க, சரண்யா தன்னிடம் இருப்பதாகவும் அனுப்புவதாகவும் உடனேயே சொல்கிறாள்.*

*“எங்க இருந்தாலும் எந்த தண்ணிய குடிச்சாலும் ஊர்க்கோயில்களின்ர நினைப்பு மாறாது.. எங்கட அடுத்த தலைமுறைக்கும் அது நாங்கள் சரிவரக் கொடுக்க வேணும்...”*

“நான் இந்தமுறை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் திருவிழாவுக்கு போகவேணும். போகேக்க திண்ணவேலியில வாலையம்மன் கோயில் பெரிசாக் கட்டியிருக்கினமாம் போய் கும்பிடவேணும். நீங்கள் மூலஸ்தானத்தில வேல், லிங்கம், சூலம், சக்கரம் இருக்கிற கோயில்களை கேள்விப்பட்டிருப்பீங்கள். ஆனா அந்த வாலையம்மன் கோயில்ல மூலஸ்தானத்தில மிகப்புராதனமான மகா மேரு எண்ட படிப்படியா உயர்கிற ஸ்ரீசக்கரம் தான் வைச்சு அம்மனா கும்பிடுறவ...”

“எல்லாரும் உங்கட ஊர்க்கோயில்களைப் பற்றிச் சொல்லுறீங்கள். நான் எங்கட அம்மாளாச்சி பற்றி உங்களுக்கு சொல்ல வேணும்...” தானே முன் வந்தார் கோணேசா.

“உங்கள் எல்லோருக்கும் திருகோணமலை தெரியும். அங்குள்ள பத்ர காளி அம்மன் கோயிலையும் கேள்விப்பட்டிருப்பீங்கள். அந்த அம்மாளும் சரி கோயில் வரலாறும் சரி மிக புதுமையானது....

இருநூறு முந்நூறு வருஷத்துக்கு முன்னர் இராமேஸ்வரத்தில இருந்த ஒரு பிராமணருக்கு அம்பாள் காட்சி கொடுத்து இலங்கையில இருக்கிற திருகோணமலைக்கு போகுமாறு கட்டளை இட, அவர் அங்கு வர அங்கே ஓரிடத்தில் தோண்டுமாறு மீண்டும் சொன்னாவாம்...

அப்ப அவர் அந்த இடத்தில் தோண்ட ஒரு பெரிய செப்புக்கிடாரம் கிடைச்சதாம்..

அதற்குள்ள ஒரு காளியம்பாள் விக்கிரகமும் கிடைச்சதாம்... அந்த அம்பாள் விக்கிரக உருவ அமைப்பு சோழர் காலத்திற்குரியது. வேற செப்பு சாசனங்களும் கிடைச்சிருக்கு. அப்படியே அந்த பிராமண ஐயா இங்கேயிருந்து கோயிலை கட்டினாராம்... அது தான் இந்த கோயில் கதை”

“ஓ ... அவர் வந்ததும் எடுத்ததும் சரி அம்மன்ர அதிசயம் எண்டா.. எப்படி சோழர் கால விக்கிரகம் நிலத்துக்குள்ள இருந்திருக்கும்..?”

அப்பாவியாக கேட்டாள் கவின்ஜா.

“உங்களுக்கு ஈழத்தின் சைவ சமய வரலாறும் தெரிந்திருக்க வேண்டும். எங்கட நாட்டில் இந்து சமயம் பௌத்த ராஜாக்களால் கூட ஆதரிக்கப்பட்டு சிறப்பாக இருந்து. அப்போது தான் போர்த்துக்கேயர் வந்து இலங்கையை கைப்பற்றினார்கள். அவர்கள் ஒரு கோயில் விடாமல் எல்லாவற்றையும் அடியோடு அழித்து அந்த கற்களை வைத்தே கோட்டைகளும் சேர்ச்சுகளும் கட்டினாங்கள்..”

“அப்ப அவர்கள் கோயிலை இடிக்கேக்க இருந்த பெரியாக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் சில விக்கிரகங்களையேனும் பாதுகாக்க வேண்டும் என்று நிலத்துக்குள் தாட்டு வச்சவை... இது கூட அப்படி பாதுகாக்கப்பட்ட விக்கிரகமாக இருக்கக் கூடும்...”

இப்படிச் சொன்னார் இலங்கையில் உயர் பதவியிலிருந்து இப்போது புலம் பெயர்ந்திருக்கிற ஷண்முகநாதன்.

“ஓ... அப்ப எங்கட குருக்கள்மார் தொடக்கம் எல்லாரும் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பினம்...” சொன்னாள் கவின்ஜா.

“அது தான் பிள்ளை இப்ப எங்கள உலகம் எல்லாம் போய் உழைச்சு சைவத்தையும் தமிழையும் பரப்பச் சொல்லி பெருமான் விட்டிருக்கிறார்...” என்று சிரித்தார் ஷண்முகநாதன்.

இப்படி அவர் சொல்லுகிற போது விழாவில் கனடாவிலேயே பிறந்து வளர்ந்த பிள்ளைகளின் ”மாருதப்புரவீகவல்லி நாடகம்” மேடை ஏற இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

எல்லோரும் மேடையை நோக்கித் தம் கவனத்தைத் திருப்புகிறார்கள்...

## நூராசிரியர் எழுதிய சில நூல்கள்

01. மகத்துவம் மிக்க மகாவிஷ்ணு வழிபாடு
    (வைணவ மார்க்க அறிமுக நூல்) - 2009
02. எவ்வழி நல்வழி (பல்சமய உறவாடல் நூல் - 2009
03. நீர்வைக் கந்தன் பிள்ளைத் தமிழ் - 2010
04. கருணை நிறை காமாட்சி - 2011
05. .லண்டன் திருமுருகன் இன்பத் தமிழ் பாமாலை - 2011
06. அபிராமியின் காதலன் (குறுநாவல்) - 2012
07. ஸ்தோத்திர மணி மாலா (சமஸ்கிருத புதுக்கவிதைகள்) - 2013
08. ஏற்றம் பெருக வந்தாய் (கவிதைத் தொகுப்பு) - 2013
09. ஈழத்து வேதியர்களிடம் வழங்கும் அமாழி வழக்காறுகள் - 2015
10. கல்யாண வைபோகம் - 2015
11. வேதமும் நாமும் - 2018
12. ராகு காலப் பூஜை ஓர் அறிமுகம் - 2017
    (சிங்கள மொழிமூல விளக்கங்களுடன்)
13. குமார காவியம் - 2017
14. சகலகலாவல்லி மாலை உரை - 2017
15. குருபர காவியம் - 2018
16. ஒரு சமூகத்தின் வருகை (குறுநாவல்) - 2019
17. சிவசங்கர பண்டிதர் வாழ்வும் வளமும் - 2021
18. நீர்வைக் கதிர்வேல் - 2025
19. கோயில் சொல்லும் கதை - 2025 (இந்நூல்)



பிரம்மஸ்ரீ தியாக. மயூரகிரி குருக்கள் 1989 இல் நீர்வேலியில் பிறந்தவர். கொக்குவிலை வேட்டகமாகக் கொண்டவர். நீர்வேலி செல்லக்கதிர்காமசுவாமி தேவஸ்தானப் பிரதம குருவாகவும் அரச பணியில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகவும் பணியாற்றுகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து இதழியலில் பட்டயம், மற்றும் கலைமாணி, சைவசித்தாந்தத்தில் முதுமாணி பட்டங்களைப் பெற்றவர். ஈழத்தவர்களின் மூத்த பத்திரிகையான இந்து சாதனம் இதழின் ஆசிரிய பீடத்தில் பிரதான அங்கம் வகிக்கின்றார். அத்துடன் சனாதனி என்ற சமய சஞ்சிகையையும் வெளியிட்டு வருகின்றார்.

கவிதை, நாவல், சிறுகதை திறனாய்வு எனப் பன்முகப்பட்ட இலக்கிய முயற்சிகளை மேற்கொள்ளும் இவர் சமஸ்கிருத மொழியிலும் கவிதை நூல்களை வெளியீடு செய்துள்ளார். வலிகாமம் கிழக்கு பிரதேச மட்ட, யாழ்ப்பாண மாவட்ட, வடக்குமாகாண, தேசியமட்ட இலக்கிய விருதுகள் பலவற்றைப் பெற்றுள்ளார். இளம் வயதில் தமிழக ஆதீனங்களது பாராட்டையும் பெற்றுள்ளார்.

**கோயில் சொல்லும் கதை** என்ற இந்நூல் இவரது பத்தொன்பதாவது நூலாகும். புனைவு இலக்கிய எழுத்து நடை நூலாசிரியருக்குக் கைவந்த கலை. இதனால் கோயில்கள் சார்ந்த வரலாறுகளை சுவாரசியமாக கதை சொல்லும் பாங்கில் எடுத்தியம்பியுள்ளார். கி. பி. 8 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 2025 வரையான காலப்பகுதியில் அடங்கும் 25 கோயில்கள் பற்றிய வரலாறுகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

*–செந்தமிழ்ச்சொல்லருவி*
*சந்திரமௌலீசன் லலீசன்*

ISBN 978-955-38411-6-2

Print By: Shampavi Printers, Jaffna. 021 2224143